Regd No M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு „ ரூ. 9-0-0. „ 0-2-6.

மாலை 22 } ஈரோடு 4-12-1948 சனிக்கிழமை } மலர் 13.

★

## தமிழா சிந்தித்துப் பார்.

★

வெண்பா.

1. கோதை சிகைநீக்கிக் கோவிந்தா வென்றலறும்
பேதைகா ளேனுமக்கிப் பேதைமை—சூதுபுரி
பார்ப்பானும் நீக்குவனோ பார்ப்பனத்தி தன்சிகையை
கார்த்திகைதான் செய்வானோ காண்.

2. கோவிந்தா வென்றலறிக் கும்பலாய்க் குன்றேறும்
பாவிகாள் சிந்தித்துப் பார்த்நீரா—ஆவி
கொடுத்துழைத் துண்ணாது கொட்டுபணம் பார்ப்பான்
எடுத்துண்டு வாழ்வதனை இங்கு.

3. கட்டை பிளந்துழைத்த காசுகளை யுண்டியிட்டு
மொட்டை யடிக்கவிழை மூடர்காள்—தெட்டியுமைப்
பார்ப்பான் பிழைக்கவழி பண்ணியதென் றோராமல்
வேர்த்திடக்குன் றேறுவதேன் மேல்.

4. உண்ணா துடுக்காது உண்டியிலே போட்டுவைத்து
அண்ணாந் தறிவின்றி யார்ப்பரித்துக்—கண்ணான
மொய்குழலாள் தன்சிகையை மொட்டையடிக்கின்றாயே
செய்வானோ பார்ப்பானுந் தேர்.

5. தீப்பந்தங் கைபிடித்துச் சேவண்டி சங்கார்த்து
மாப்பித்தன் போலாடி வாக்குரைத்து—காப்பிட்ட
உண்டியலைக் கையேந்தி ஊர்திரியும் பார்ப்பானைக்
கண்டதுண்டா இவ்வுலகிற் காண்.

—கோல்லிப்போருட்பன்.

வரலாறு

# சோழ நாட்டின் சில பரம்பரை.

★

பூர்வ காலந்தொட்டு தென்னிந்தியாவில் பிறருக்கு அடிமையின்றிச் சுதந்தர நாடுகளாக விளங்கிய திராவிட அரசுகளுள் கி.பி. பத்து, பதினோராம் நூற்றாண்டுகளிலிருந்த சோழ அரசுகள் மிகவும் குறிப்பிடத் தக்கவை. சோழ நாட்டின் சரிதம் பூர்வ காலந்தொட்டு கடைசி காலம் வரை சரித்திரத்தில் சரியாக எழுதப்படவில்லை என்றாலும், வேற்று நாட்டவரின் சரிதங்களைப் படிக்கும் போதும் தென்னிந்தியாவிலிருந்த மூன்று திராவிட அரசுகளை வென்று தன்னாட்சியில் கொண்டு வந்ததாக எந்த நாட்டுச் சரித்திரத்திலும் படித்ததில்லை.

தென்னாட்டுத் திராவிட அரசர்களின் சரித்திரத்தைப் பண்டைய தமிழ் நூல்களிலிருந்து அறியுமளவு கூட சரித்திரத்தில் அறிய முடியவில்லை. பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோழர்கள் பாண்டியர்களோடு சில விவகாரங்களில் கலந்து ஆட்சி செய்து வந்தனர். பண்டைத் திராவிடரின் மதம் மாய்க்கப்பட்டு ஆரிய மதம் தென்னாட்டில் புகுத்தப்பட்ட பிறகு ஒவ்வொரு அரசாங்கத்திலும் பார்ப்பனர்கள் ஆதிக்கம் வளர ஆரம்பித்தது. இது சோழ நாட்டின் மத்தியகால மாறுதல். இவைகள் சோழ ஆட்சியைப் பற்றிய பண்டையத் தமிழ் நூல்களில் நன்றாக அறியக் கிடக்கிறது.

சோழ அரசர்களில் மத்தியகால ஆரம்பத்தில் குறிப்பிடத் தக்கவன் முதலாம் பராந்தகன். இவன் கி. பி. 907-ல் பட்டத்திற்கு வந்து 946-ல் இறந்துவிட்டான். தென்னிந்தியாவில் சோழர்களின் கீர்த்தியை நிலைநாட்டிய உண்மை வீரன். பாண்டியர்களோடு பல விஷயங்களில் கூடி ஆட்சி செய்து வந்தாலும், சில விஷயங்களில் பகை வளர்ந்து வந்தது. அதனால் பாண்டியநாட்டின்மீது படை எடுத்துச் சென்று, அதை ஆண்டு வந்த ராஜசிம்மனை மதுரையில் தோற்கடித்தான். பிறகு சிலோன் மீது படை எடுத்துச் சென்று அதை ஆண்டு வந்த இரண்டாவது பிரிதிவிபதி என்பவனையும் வென்றான்.

பராந்தகன் பிள்ளைகள் ராஜாதியா, மூவாடி சோழன் ஆகிய இவர்கள் ராஷ்டிர குத்தா என்னும் அரசனுடன் தக்கோல என்னுமிடத்தில் போர் செய்து அவனை வென்றனர். ஆனால் ராஜாதியா அப் போரில் இறந்துவிட்டான். இப்போருக்குப் பின் சோழ ராஜ்யம் சீர்குலைந்தது.

அரை நூற்றாண்டுக்குப் பின் முதலாவது ராஜராஜன், ராஜாதியாவின் இளைய சகோதரனின் பேரன், சோழ நாட்டைச் சீர்படுத்தி, விஸ்தரித்து அமைக்க முன்வந்தான்.

ஏற்கனவே சோழர்கள் தென்னிந்தியாவில் சக்திவாய்ந்த ஒரு சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்தினார்களல்லவா? அதனால் அதைத் திருத்தியமைப்பது ராஜராஜனுக்கு அவ்வளவு சிரமமாகத் தோன்றவில்லை. ராஜ ராஜன் கி. பி. 985-ல் பட்டத்திற்கு வந்தான். இவன் பட்டத்திற்கு வருவதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சேர நாட்டின் கடற்படையை குண்டலூர் சாலைக்கருகில் தோற்கடித்தான். பட்டத்திற்கு வந்த சில ஆண்டுகளுக்குள் தென்னிந்தியாவிலிருந்த எல்லா நாடுகளையும் வெற்றி கொண்டான். கிழக்கில் வாகிலியைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்திய சாளுக்கியரையும், பாண்டியரையும், மைசூரை ஆண்டு வந்த கெங்கர்களையும் மலையாளத்தையும் வென்றான். இவனுடைய நாடு வடக்கே கலிங்கம் வரையிலும், தெற்கே சிலோன் வரையிலும் பரவியிருந்தது. சத்திய சங்கரியா என்னும் மேற்கு சாளுக்கிய அரசனையும் வெற்றி கொண்டான்; கி. பி. 1012-ஆம் ஆண்டிலே சோழர்களின் கடற்படை மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்தது. முதலாம் ராஜ ராஜனின் மகன் முதலாம் ராஜேந்திர சோழன் சோழக் கடற்படையை நடத்திச் சென்று வங்காளக் குடாக்கடல், அரபிக்கடல், இந்துமகா சமுத்திரம் முதலிய கடல்களிலிருந்த தீவுகளையெல்லாம் வெற்றி கொண்டான். ராஜ ராஜன் கி. பி. 1012-ல் இறந்துவிட்டான்.

இவன் தன் சலைநகரான, தஞ்சாவூரில் ஒரு பெரிய சிவன் கோயிலைக்கட்டினான். அந்தக் கோயில் சுவரில் ராஜராஜனின் வீரச்செயல்களையெல்லாம் செதுக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 1006ல் சூடாமணிவரன் என்னும் அரசன் மலேயாவில் கெடா (Kedah) என்னும் நாட்டை ஆண்டு வந்தான். இவன் பௌத்தமதத்தைச் சார்ந்தவன். பௌத்த சந்நியாசிகளுக்காக நாகபட்டினத்தில், ஒரு தங்குமிடம் கட்டினான். இது சூடாமணிவரன் காலத்தில் முடிவுறவில்லை; அவனுடையமகன், மாறவிஜயோத்துங்கவர்மன் காலத்தில் தான் முடிவுற்றது. சூடாமணிவரன் வேண்டுகோளுக்கிணங்கி ராஜராஜன் ஒரு கிராமத்தையே அதற்கென தானம் கொடுத்தான். இதனால் சோழ அரசர்கள் ஆரியமதக்கோட்பாடுகளையேற்று, சைவர்களாக இருந்தாலும், பௌத்தமதத்தை நாட்டில் பரப்புவதற்கு உதவிசெய்திருக்கிறார்கள் என்றும், வேற்று மதங்களின் மேல் துவேஷமனப்பான்மை கொண்டிருக்கவில்லை என்றும் தெரிகிறது.

முதலாம் ராஜராஜனின் மகனும் அடுத்தவாரிசுமான ராஜேந்திர சோழனும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகரற்ற அரசர்களாக விளங்கினார்கள். இவன் கி. பி. 1012ல் சிம்மாசனமேறிய உடன் மேற்குச் சாளுக்கிய அரசனான இரண்டாவது ஜயசிம்மனைத் தோற்கடித்தான். சாளுக்கியர்களுக்கும், சோழர்களுக்கும் முசங்கியில் (Musangi) நடந்த பயங்கரப்போரில் சோழர்கள் வெற்றிபெற்றது சோழநாட்டின் சரித்திரத்திலேயே மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். வடக்கில் இந்திரரதன் என்னும் அரசனையும் மத்திய இந்தியாவில் காஸ்டர் நாட்டின் அருகில் சக்கரகோட்டா என்னுமிடத்தில் தோற்கடித்தான்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




காட்சி 6.

[சி. முதலியார் வீடு]

உறுப்பினர்:-சின்னான், சின்னாயி, முதலியார், விமலா, இராஜன், பத்மா.

கதை அமைப்பு:-[விமலா தன் அப்பாவுக்கு இராஜனை அறிமுகப்படுத்தி மில்லாபீசில் ஒரு உத்தியோகம் வாங்கிக்கொடுக்கிறாள்.]

சின்னான்:-[விமலாவின் அறையைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறான்.].

சின்னாயி:- இஞ்சே...இந்தா... உன்னைத்தானே......இப்படிக் கொஞ்சம் வந்துட்டுப் போயேன்... அய்யே...பட்டணம் பொடியில வைச்சிருக்கேன்...

சின்னான்;-[புத்தக ஸ்டாண்டைத் துடைத்துக் கொண்டே] ஆ...ங்! பொடியா? பொடிபோட்டு ஆளை மயக்கப்பாக்குறியோ...! யாரது...? [என்று கூறித் திரும்பிப்பார்த்து] அடிச்சக்கே! நீதானா...எங்குட்டி—வீட்டுக்குப் போகாமே...இங்கேன் வந்தே...?

சின்னாயி:- இது வீடில்லாமே என்னவாம்? நூக்கும்!

சின்னான்:- இந்த ாபாரு...! இந்தக் குணட்டல் சேட்டை எல்லாம்...எங்கிட்டே வைச்சுக்கப் படாது...! வேலை விட்டியோ......வீட்டுக்குப் போனியோன்னு இல்லாமேமொட்டைப்பசங்களாட்டம் ஊரெல்லாம் சுத்திக்கிட்டு வர்றியே...! உடம்புமேல் என்னமா இருக்குன்னு கேக்குறேன்...?

சின்னாயி:- ஆங்...! இருக்குப் பஞ்சுங்...கிஞ்சுமா...!

[தலையிலே ஒட்டிக்கொண்டுள்ள பஞ்சுகளை எடுத்துக் கீழே போடுகிறாள்]

சின்னான்:- அது தெரியுங் குட்டி...! நீ பெரியமில்லாபீசிலே... வேலை பாக்குறவள்னு...! உன்னை...எந்தப் பயல் இங்கே வரச்சொன்னான்னு கேக்குறேன்! அதுக்கு வதிலேச் சொல்லுடி முதல்லேன்னா...?

சின்னாயி:- அடச்சிப் போ! நீ ஒரு சுடு மூஞ்சியிணு தெரிஞ்சிருந்தே நான் ஒருத்தி உங்கிட்டே வாறேனே...?

சின்னான்:- சுடி மூஞ்சியாவது...? பொடி மூஞ்சி...ஆ...ங்... எங்குட்டிப்...பட்டணம் பொடி வைச்சிருக்கேனியே...! எங்கே...? இப்படிக் கொடேன் பார்ப்போம்!

சின்னாயி:- அய்யே...! ஓம்... மூஞ்சிக்குப்...பொடியைக் கொடுத்துட்டுத்தான் போகணும்...? ச்சிப் போ! இவ்வளவு நேரமாக் குதிச்சியே மேலும் கீழுமா...! இப்போ என்னாத்துக்குப் பல்லை இளிக்கிறே...?

சின்னான்:- கோவிச்சுக்காதே... என் ராணி...

சின்னாயி:- கோவிச்சுக்கலே... என் ராசா...

[என்று கொஞ்சிப் பொடியைக் கொடுத்து விட்டு நிற்கும் போது முதலியார் வந்து கொண்டிருப்பதை அறிந்து ஓடிப்போகிறாள்]

சின்னான்:- [பொடியை வாங்கிக்கொண்டு விலகிச் செல்லும் போது] இவகிட்டே...இந்தப்பொடியை வாங்கிக்கப் பட்டபாடு... போதும் போதும்னு ஆச்சு...உம். [பொடிப் போட்டுக்கொண்டு பிறகு மூக்கைத் துடைத்துக் கொண்டு திரும்பி வரும்போது]

சரித்சான்......ியவதார், போ குட்டி...! இனிமே, இந்தப் பக்கம் தலையைக் காட்டினே...முதுகுத் தோலை உறிச்சுப்புடுவேன்...

முதலியார்:- அடிச் செருப்பாலே...! ஏண்டாடேய் சின்னான்...! கண்ணு தெரியலையோ...?

சின்னான்:-[திடுக்கிட்டுப் பயந்து நடுநடுங்கிக் கொண்டு] இல்லீங்க எசமான்...

முதலியார்:- என்னடா இல்லே.... கண்ணே தெரியலையா...?

சின்னான்:- ஆங் ஆங்...! கண்ணு தெரியுதுங்க, கண்ணு தெரியுதுங்க...

முதலியார்:- அதுதானே...! எங்கே முழியிருக்கும் போதே விழி போயிருச்சோ என்று பார்த்தேன்! அதெல்லாம் ஒன்னுமில்லையே...?

சின்னான்:- இல்லீங்க...!

முதலியார்:- சரி! போயி, விமலா உள்ளே இருந்தா வரச்சொல்லு.

சின்னான்:-ஆகட்டுங்க...[என்று உள்ளே போகிறான்]

முதலியார்:-[சாஸ்திரியார் கொடுத்த புத்தகத்தை மேஜைமீது வைத்து விட்டு உள்ளே செல்கிறார்]

விமலா:- [வெளியிலிருந்து ஒரு ஆங்கில நூலோடு தன் அறைக்குள் வந்து, அந்நூலைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து மகிழ்ந்து பாடுகிறாள்]

(5) [பாட்டு:
இராகம்-இந்துஸ்தானி]

கல்லூரியாலே பெண்களும்
நாடுவர் நூலே (க)
ஆங்கில போதம் ஆதார நீதம்
அறிந்து சிறந்து உயர்வு
காணும்...... (க)

[மேஜை மீதிருந்த பாரதியார் படத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டு]

நம் திருநாடும் பெண்புகழ்பாடும்
நலிந்து மெலிந்து செயலில்
வாடும்...... (க)

[பிறகு, மேஜைமீதிருந்த மற்றோர் புதிய நூலை எடுத்துப் பார்த்து, அதன் பெயரை மனதிற்குள் படித்து விட்டுச் சில பக்கங்களைப் புரட்டிப் பார்த்து விட்டு]

மங்கைகள் கேடு மனுநீதி ஏடு
மறந்து துறந்து விலகி ஓடு......(க)

[என்று வீசி எறிந்து விட்டுப்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# "அவளும்—நானும்"

போட்டி

எண் 12.

"அத்தான்" என்ற அழைப்பின் ஒலி என் அமைதியைக் குலைத்தது. நீலநிற வானில் கெளிந்தோடும் வெண்ணிலாவின் அழகையும், கண் சிமிட்டி மோகனப்புன்னகைசெய்திடும் தாரகைகளையும் கண்டு ரசித்துக்கொண்டிருந்த என் உள்ளத்தை அவள் அழைப்பு வேறு பக்கம் திருப்பியது. ஆயினும், இயற்கையின் எழில்நிறை தோற்றத்தைக்காண்பதிலேயே ஈடுபட்டிருந்தேன். "என்னவோ மனக்கோட்டை?" என்ற கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள் கலகலக்கும் வளையலொலியோடு அவள் கை என் தோள்களைப்பற்றியது. திரும்பிப் பார்த்தேன் அவள்—என் இதயராணி—கமலம் என்முன் நின்றாள். "ஒன்றுமில்லை" என்று கூறி மழுப்பிவிட எத்தனித்தேன். அவளோ அத்துடன் விட்டு விடாது "விசயத்தைத்தான் கூறுங்களேன்" என்று கொஞ்சியகுரலுடன் கேட்டாள். அவளுடைய வேண்டுகோளை மறுக்க முடியாத நான் "எல்லாம் நமது பழைய காதல் நினைவுகள்" தான் என்று கூறிவிட்டு அவளது முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். அவள் அதற்கு எதுவும் பதில் சொல்லாமல் தலை குனிந்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். களங்கமற்ற அவளது முகம் வெட்கத்தால் குபீரென்று சிவந்துவிட்டது. அவளது கோவை அதரங்களில் புன்னகை அரும்பு விட்டது. சென்ற காலத்தில் எங்கள் வாழ்வில் நிகழ்ந்து மறைந்து போன நிகழ்ச்சிகள் என் மனக்கண் முன் சலனப்படம் போல் தோன்ற ஆரம்பித்தது.

* *

அவளும் நானும் காதலர்களாகிய வரலாறு ஒரு விசித்திரமானது. சாதாரண முனிசிபாலிடி குமஸ்தாவான எனக்குப் பிரபலமான குடும்பத்தில் பிறந்த கமலம் காதலியாக வாய்க்கப் பெற்றாள்! அவளுக்கும் எனக்கும் இடையில் காதல் மலர் புஷ்பிக்க உதவியாகவிருந்தது குமாஸ்தா உத்தியோகம்தான். கமலமோ அந்த முனிசிபல் சேர்மன் மகள். நானோ அந்த முனிசிபல் ஆபீஸ் குமாஸ்தா. இருந்தாலென்ன? உண்மைக் காதலுக்குத்தான் உயர்வுதாழ்வு கிடையாதாமே?

கமலம் அப்பொழுது பத்தாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். நான் அவள் வீட்டிற்குச் சென்று ஆபீஸ் விசயமாக எதாவது எழுதிக்கொண்டிருக்கும் பொழுது "பேனா வேண்டும், பேப்பர் வேண்டும்" என்று என்னிடம் கேட்பதற்கு வருவாள். நான் எப்படி இல்லையென்று சொல்ல முடியும்? அவள்தான் சேர்மன் மகளாயிற்றே! இதுபோன்ற சாதாரணப் பேச்சு வார்த்தைகளிடையே ஏற்பட்ட அறிமுகம் முடிவில் காதலாகப் பரிணமித்து விட்டது. அவள் குறுகுறுப்பான பார்வையோடு, சதுப்புக் கன்னங்கள் குழிவிழும்படியாகச் சிரிக்கும் பொழுது அவளுடைய முகத்தில் ஒரு தனியழகு தாண்டவமாடும். இயற்கை அழகோடு விளங்கிய அவள் நாகரீசப் பகட்டு வேஷங்களில் நாட்டம் செலுத்தாமலும், நாகரீகம் என்று கருதிக் கொண்டு அநாகரீகமாக அழகு செய்து கொள்ளும் நவயுக யுவதிகளைப்போலல்லாமல் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையையே பின்பற்றி வந்தாள். அவளிடம் குடிகொண்டிருந்த இந்த விசேஷ அம்சமே என் உள்ளத்தைக் கவர்ந்தது. அப்படியில்லாமல் அவசியமற்ற ஆடம்பரத்தில் ஈடுபட்டிருப்பாளாயின் அவளுக்குச் சோப்பும், ஸ்னோவும், லிப்ஸ்டிக்கும் வாங்கிக்கொடுக்கச் சாதாரண குமாஸ்தா உத்தியோகத்திலுள்ள என்னால் எப்படி முடியும்?

காதல் உலகில் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த என் வாழ்வில் சூறாவளி வீசத் தொடங்கி விட்டது. நான் முனிசிபாலிட்டியில் வகித்து வந்த உத்தியோகத்திற்கு சீட்டுக் கிழிந்துவிட்டதுதான் காரணம். நான் தற்காலிகமாக வேலைபார்த்து வந்ததும், முனிசிபாலிட்டியாரின் ஆள் குறைப்புத்திட்டமும்தான் அவளையும் என்னையும் சந்திக்க முடியாதபடி சதிசெய்து விட்டது. வேலையை விட்டு நீக்கப்பட்ட நான் அவள் வீட்டிற்கு எப்படிப் போகமுடியும்? வேலையற்ற நான் என் சொந்த ஊருக்குப் போவதென்று தீர்மானித்தேன். அன்று மாலை அவள் கல்லூரியினின்று திரும்பும்பொழுது சந்தித்து எனது காதல் நினைவாக ஒரு புத்தகத்தையும் கொடுத்து—ஏழைக் குமாஸ்தாவால் வைர மோதிரமா பரிசளிக்க முடியும்?—அவளைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லையென்று உறுதியும் கூறிவிட்டு அன்றிரவே என் சொந்த ஊர் வந்துசேர்ந்தேன்.

நாட்களும் திங்களும் நகர்ந்தோடி மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டன. மூன்றாண்டிற்குப் பின் மீண்டும் வெளியூரிலேயே வேலை கிடைத்தபடியால் உணவு விடுதியில் சாப்பிட்டுக்கொண்டு ரூமில் தங்கியிருந்தேன். அந்த ஊர் அவ்வளவு பெரிய நகரமுமல்ல. ஆனாலும் சிறிய கிராமமுமல்ல. என் ரூமிலிருந்து நான் ஆபீஸிற்குப் போகும் பொழுதும், திரும்பி வரும்பொழுதும் அந்த ஒரே வீதியின் வழியாகத்தான் நடப்பது வழக்கம். எனக்கு அது குறுக்கு வழியாகத் தோன்றியதுதான் காரணம். மாலை நேரத்தில் அந்த வீதி கொஞ்சம் குதூகலமாகவே தோற்றமளித்தது. இயற்கை அழகில்லாவிட்டாலும் புது யுகத்திற் கேற்றாற் போல் அழகு செய்துகொண்டிருக்கும் பெண்கள் தெருவழியாகச் செல்பவர்களை வசீகரப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். பல இளைஞர்கள் அந்த வீதியை மோப்பம் பிடித்துக்கொண்டிருந்தது எனக்கு வியப்பாகவே இருந்தது. அந்தத் தெருவில் கடைசி வீட்டிலிருந்த ஒரு பெண் என்னைக் கண்டவுடன் காதல் கொண்டு விட்டது போல் நடித்துப் புன்சிரிப்பை வீசத் தொடங்கினாள், அவளுடைய செயல் முதலில் எனக்கு வெறுப்பாகவேயிருந்தது. ஆனால், பிறகு ஆசையையும் தூண்டிவிட்டது. மறுநாள் எனது ஆபீஸ் நண்பரிடம் விசாரித்ததில் அது விலைமாதர் வாழும் தெரு என்பதை உணர்ந்துகொண்டேன்.

சமுதாயம் தனது காமப்பசியைத் தீர்த்துக்கொள்வதற்கு ஒதுக்கிவைத்திருக்கும் அந்தப் பெண்களை நினைக்கும் பொழுது எனக்கு மிகவும் வேதனையாகவேயிருந்தது. கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக கற்பை விற்கும் பெண்களையும், நரம்பின் துடிப் புணர்ச்சியைப் போக்கிக்கொள்வதற்காக விபசார விடுதியை நாடிச் செல்லும் ஆடவர்களையும் பார்க்கும் பொழுது, மனித சமுதாயம் பகுத்தறி

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

தோழர்களே.

இதற்குமுன் 11 கதைகளையும் படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 1 கதை பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

# பதுமையின் பிதற்றல்!

[௪]

“காண்டீபம்” என்ற வார ஏடு, “தினசரியின் வெளியீடு. முன்னாள் “தினமணி” தோழர் சொக்கலிங்கம அவர்களுக்குப் பாத்தியப்பட்ட ஏடு. முன்பு நடந்த இந்தி எதிர்ப்பைக் கிண்டல் செய்து எழுதிய நண்பர். நாரதர் கானம், ஊதல், உறிஞ்சல், உண்ணல்” என்ற தலைப்பைக் கொடுத்து, இந்தி எதிர்ப்புப்பெண் மணிகளை விலைகூறித்தாக்கி எழுதியதின் விளைவால், பேனா நர்த்தனத்தின் பேஜாவில் சிக்கி தாக்குண்டுமண்டை உடைந்து, மூளை குழம்பி, மூலையில் முக்காடிட்டுக் கிடந்த அதே தோழர், சொக்கலிங்கம் அவர்களின் “தினசரி” வெளியீடான “காண்டீபம்” என்ற இதழ், இப்பொழுது திராவிடர் கழகத்தை மோதுகிறது. காரணம் அறியாமையோ, அறிந்து கொள்வதற்கு ஆற்றல் இல்லாமையோ என்று கூறிவிடமுடியாது. எல்லாம் தெரியும் அந்த ஏட்டிற்கு. ஆனால்! பணத்திற்கு ஈடு எதுவுமில்லை என்ற எண்ணத்தினால், பணத்திற்கு மண்டியிட்டு, மானத்தை விற்று, நாட்டை மறந்து, தன் இனத்தையே காட்டிக் கொடுக்கிறது. எனவே இனப்போராட்டம் செய்யும் திராவிடர் கழகத்தைத் திட்டும்பணியில் ஈடுபட்டிருக்கிறது, “தினசரி” வெளியீடு. திட்டுவதுதான் திட்டுகிறதே, கொஞ்சம் பகுத்தறிவுடனாவது திட்டுகிறதா! என்று பார்த்தால் அதுவும் இல்லை. பகுத்தறிவு வாதிகள் உலவும் நாடாயிற்றே என்ற பயமாவது இருக்கிறதா? அதுவும் இல்லை. எல்லாம் பணம் செய்கிற வேலை!

“பதுமை சொன்ன கதை” என்ற தலைப்பில் திராவிடர் கழகத்தைத் திட்டி வருகிறது. கேவலம் உயிரற்ற பதுமைதானே! கதை எப்படிச் சொல்லும். செருப்பால் அடித்தாலோ! பெருக்குமாற்றைச் சாணிப்பாலில் முக்கி அடித்தாலும் கூட ஏனென்று கேட்கவா போகிறது. அதற்காக ஏன்? கோபிப்பானேன் என்பீர்கள். ஆம்! உண்மையே. ஆனால் பதுமை சொன்னதாக கதை கட்டுகிறாரே அவர் உடலில் ஓடும் ரத்தத்தில் ஒரு துளிக்காவது, மானம் பிறக்கட்டுமே! தன் மடமையைக் குறித்து வருந்தட்டுமே! என்பதற்காகவாவது, ஒரு டோஸ் மருந்து கொடுக்கத்தானே வேண்டும். சரி, இனி பதுமை என்ன சொன்னது என்ற விவகாரத்திற்குப் போவோம்.

“வெளியூர்களில் சண்டமாருதப் பிரச்சாரம் செய்து வரும் கருப்புச்சட்டைத் தோழர்கள், இன்ஜினியர்கள் வேலை பார்த்து வர ஆசைப்படுகிறார்களாம். அதாவது எங்கெங்கு ஓட்டைகள் இருக்கின்றன, எங்கெங்கு ஒழுகல் இருக்கிறது என்பதையெல்லாம் கண்டுபிடித்து அவ்வளவையும், காங்கிரஸ் மீதும், காங்கிரஸ் தலைவர்கள் மீதும் மண்வீசும் திருப்பணிக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறது என்பது திட்டமாம்” இது பதுமையின் முதல் குற்றச்சாட்டு.

ஏ! பதுமையே! உன் தனிப்பட்ட முறையில் உன் வீட்டிலுள்ள பானை, சட்டிகள் ஓட்டை விழுந்தால் அதைப்பற்றின கவலைஎங்களுக்கில்லை. (நீ விரும்பாததால்) ஆனால் ஒரு நாட்டையே பாதிக்கக்கூடிய அளவுக்கு நிர்வாகத்தில் ஓட்டை விழுந்துவிட்டால்! உன்னைப் போன்ற உயிரற்ற பிண்டங்கள் வாளா இருந்தாலும் நாட்டு மக்களின் மீது அக்கரை கொண்ட எங்களால் எப்படி பேசாதிருக்க முடியும்? இந்நாட்டின் நிர்வாகத்தின் ஒழுகல் பொறுப்பை அடைக்கும் திருப்பணி காங்கரஸ் நண்பர்களிடம் இருப்பதால்தான், காங்கரஸ் தலைவர்கள்மீது அறிவு என்கிறமண்ணை எறிந்து நிர்வாகத்திலே இருக்கும் அறியாமை என்ற ஒழுகலை அடையுங்கள் என்கிறோம். இதில் என்ன தவறுதலைக் கண்டுவிட்டாய்!

பின்னும் கூறுகிறது, வெள்ளைக்காரனிடத்தில் ஒசிக்கோட்டு வாங்கிப் போட்டுக்கொண்டு, சிந்து பாடினோமாம்! மடப் பதுமையே இதற்கு நான் பதில் சொல்வதைவிட அன்று எங்களிடம் இருந்து, இன்று உங்களோடு, உங்களால் மந்திரிப் பதவி, அங்கத்தினர் பதவி கொடுத்துப் போற்றிப் புகழ்ந்து வரும் டாக்டர் சுப்பராயன், மாஜி! குமாரராசா முத்தையா செட்டியார் போன்றவர்களைக்கேள்! அவர்கள் கூறுவார்கள் அதற்குச் சரியான பதில்.

வெள்ளைக்காரன் பூட்ஸ் மினுமினுப்புக் குறையக்கூடாது என்று குனிந்து, குனிந்து, பாலீஸ் போட்ட கூட்டம் என்று கூறுகிறது, பாலீஸ்போட்டபழக்கத்தில். அட, அறிவுகெட்ட பதுமையே! குனிந்து கொடுக்கும் குணமுடையோன், நீங்களா? நாங்களா? நன்றாக யோசித்துப்பார். வெள்ளைக்காரர்கள் குரோட்டன்ஸ் செடிகள் என்று சொன்ன கனம் ராசகோபால் ஆச்சாரியார் யார்? உன்னுடைய இந்துஸ்தானின் முதல்கவர்னர்ஜெனரல் வேவல் யார்? தற்சமயம் லண்டன் சென்ற முதன் மந்திரி நேரு, அங்கு எத்தனையோ இந்தியர்கள் இருக்க, வேவல்துரை இல்லத்தில் தங்கினாரே, அந்த வேவல் யார்? தோழியர்கள் விசயலட்சுமி பண்டிட், சரோசனி அம்மையார் மற்றும் உங்களைச் சேர்ந்த பெண்மணிகள் தங்கும் இடத்தையெல்லாம் சொல்லட்டுமா? இது ஏன்? இப்பொழுது சொல்! யார் பாலீஸ் போட்டகூட்டம், பாலீஸ்போடக்காத்துக் கொண்டிருக்கிறகூட்டம்?

சென்ற இந்தி எதிர்ப்பின் போது, சோழவந்தானில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்று நடந்ததாம். அதில் ஒரு மந்திரியார் பேசும்போது, ஒலிபெருக்கி கருவி, என்பதற்குப் பதிலாக—ஒலிபெருக்கிக் குருவி என்றாராம். அவர் கருவியை குருவி என்று சொன்னது. மெய்யோ— பொய்யோ

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 40-ம் நாள் போர்.

சென்னை நவ. 25.

முத்தியாலுப்பேட்டை கழகத் தலைவர் இல்லத்திலிருந்து புறப்பட்டு, வழக்கம்போலவே தோழர்களான கலைச்செல்வன், சாளைகபீர், திராவிடமணி, பாண்டியன், அலமேலு அம்மையார் ஆகிய அய்வரும், முத்தியாலுப் பேட்டைப் பள்ளியின் முன்பு 9-30 முதல் 10-30 வரை மறியல் செய்தனர்.

## க. கா. களின் பதவி மோகம்!

பொது லட்சியத்திற்காக யாவரும் ஒன்றுபட்டு உழைக்க இதுவே சமயம். வாக்குவாதங்களுக்கு நேரமில்லை. ஆனால் நம்மவர்களோ பதவியைத்தேடி அலைகின்றனர்! சிலருக்கு மந்திரிப் பதவி விருப்பம்! சிலருக்கு பார்லிமெண்டரி காரியதரிசி பதவி விருப்பம்! சிலருக்கு காங்கரஸ் ஸ்தாபனத்தில் நிர்வாகப் பதவிகள் வேண்டும்! இப்போது கண்ட்ரோல்கள் வந்து விட்டதால், கடைகள் முதலியவற்றிற்கு லைசென்ஸ் பெறக் காங்கரஸ்காரர்கள் விழுந்தடித்து ஓடுகின்றனர்! காங்கரஸ் காரர்களாகிய நாம் இத்தகைய போட்டியில் இறங்கினால் அதோகதியாகி விடுவோம்!

உதவி மந்திரி பட்டேல்,
26-11-48ம் நாள் பேச்சில்.

[எலும்புத் துண்டுக்கு நாய்கள் போட்டி போடுவது போல் என்று உதாரணம் சொல்லவில்லையே தவிர, மற்றபடி கதர்கட்டும் காங்கரஸ் வாலாக்கள் இன்று பதவிக்காக, பொருளுக்காக எக்காரியத்தையும் செய்வதற்குத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக "பட்டேல் பெருமான்" கூறியிருக்கின்றார் என்றே சொல்லவேண்டும். இதையே நாம் சொல்லுவோமென்றால் நமக்குத் தண்டனை என்கிறது இந்தப் புத்திசாலியான அரசாங்கம். இல்லாவிட்டால் கோவில்பட்டித் தோழர்கள் ஏன் இப்போது சிறையிலிருக்க வேண்டும்?

ஆ-ர்.]

## 12½-லட்ச ரூ. ஒரு வீடு!

பேரோ "தரித்திர நாராயணன்" நாடு!

நியூயார்க்கில் ஒரு பணக்காரக் குடும்பத்தினரால் கட்டப்பட்ட 5-மாடிக் கட்டிடத்தை இந்திய சர்க்கார் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அமெரிக்காவில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு இது தலைமைக்காரியாலயமாக விளங்கும். இதன் விலை 358,000-டாலர்கள்.

வாஷிங்டன் செய்தி.
24—11—48.

[ஒரு டாலர் என்பது 3-8-0-ரூபாய்]

## வாயோ 'என்னத்துக்கு' என்கிறது! கையோ................!

தன் சம்பளத்திற்காகவும், மற்ற செலவுச்சளுக்காகவும் மத்திய சர்க்கார் மாதம் ரூ. 20,000-க்கு மேல் செலவழிப்பதைத் தாம் அங்கீகரிக்கவில்லை என்று கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் மத்திய மந்திரி சபைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

உதவி மந்திரி பட்டேல்
28—11—48-ம் நாள்
காங்கரஸ் ஊழியர்
கூட்டத்தில்.

[அடடா! ஆறேழு மாதங்களுப் பின் அற்புதமான தியாக உணர்ச்சி! ஆனாலும் செயலுக்கு வந்துவிடவா போகிறது. வந்தால்தான் நஷ்டமென்ன?

ஆ—ர்]

## பணமூட்டைகளின் பாதுகாவலர் பட்டேல்!

தானிய இறக்குமதிக்காக நாம் ஏராளமாக வரிவிதிக்க நேர்ந்திருப்பதை நீங்கள் உணரவேண்டும். இந்தியாவைப் போல் அவ்வளவு வரிச்சுமை உலகில் எந்தத் தேசத்திலுமே கிடையாது. அந்தச் சுமை தாங்காமல் பணக்காரர்கள் அலறுகின்றனர். பணம் படைத்தவர்களும் தாங்குவதற்கு ஓர் எல்லையுண்டு.

உதவி மந்திரிபட்டேல்
26—11—48ம் நாள் பேச்சில்

[இந்தியத் துணைக்கண்டத்தில் "நேர்வரி"யினால் வரும் வருமானத்தைக் காட்டிலும் "மறைமுகவரி"யினால் வரும் வருமானமே அதிகம் என்பதும், மறைமுக வரியால் பாதிக்கப்படுவோர் பாட்டாளிகளே என்பதும் அறியாதவரல்ல பட்டேல். ஏழை மக்கள் மறைமுகமாக இங்கு கொடுத்து வரும் வரியைப்போல், உலகத்தில் வேறெந்தத்தேசத்திலும் ஏழைமக்கள் செலுத்துவதில்லை என்று அவர் கூறியிருந்தால் அது நூற்றுக்கு நூறு உண்மையாயிருக்கும். ஆனால் பணமூட்டைகள் கொடுத்த தங்கஸ்தூபியல்லவா உள்ளேயிருந்து பேசுகிறது!

ஆ-ர்]

## மதுவிலக்குத் திட்டத்தால் கதியற்ற தொழிலாளர்!

சென்னை மந்திரிசபையாரின் முன் யோசனையற்ற மதுவிலக்குத் திட்டத்தால், இன்று வேலையற்று, குடும்பத்தைக் காப்பாற்றும் வகையின்றி வாடும் தொழிலாளர் எத்தனை பேர்?

| | |
|---|---|
| வடார்க்காடு | 1,085 |
| கடப்பை | 355 |
| அனந்தப்பூர் | 693 |
| சித்தூர் | 398 |
| பெல்லாரி | 440 |
| கர்நூல் | 2,462 |
| சேலம் | 2,069 |
| கோயமுத்தூர் | 13,500 |
| தஞ்சாவூர் | 11,800 |
| திருச்சி | 1,791 |
| மதுரை | 1,578 |
| மலபார் | 28,489 |
| தென் கன்னடம் | 9,789 |
| நெல்லூர் | 2,465 |
| குண்டூர் | 2,930 |

"மதுவிலக்கு மந்திரியார்"
26-11-48ம் நாள். சட்டசபையில்.

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 41-ம்நாள் போர்.

சென்னை நவ 26.

இன்று வழக்கம்போலவே முத்தியாலுப்பேட்டை பள்ளியின் முன்பு அய்ந்து தொண்டர்களின் மறியல் 9-30 முதல் 1-மணிநேரம் நடந்தது. மழை சிறிது இருந்தாலும் மக்கள் பொருட்படுத்தவில்லை. போலீசாரின் கெடுபிடி அறவே இன்று இல்லை. ஆனால் அந்த இடத்தில் ஒழுங்கை நிலைநாட்ட மறியலை முன்னின்று நடத்தும் பிரமுகர்களே ஏற்றமுறையில் பாடுபட்டனர்.

### 42-ம் நாள் போர்.

சென்னை நவ 29.

வழக்கம்போலவே இன்றும் ஒரு மணி நேர மறியல் நடைபெற்றது. தொண்டர்கள் கழகத் தலைவர் வீட்டிலிருந்துபுறப்பட்டு வரும்போதும்திரும்பிச் செல்லும் போதும் ஏராளமான பொது மக்கள் பின் தொடர்ந்து ஒலி முழக்கம் செய்து வந்தனர். வழக்கம் போல் மாணவர்களும் எதிர்ப்பொலிகளை முழக்கிக்கொண்டே பள்ளியுள் புகுந்தனர்.

## இளைஞர் மறுமலர்ச்சிக் கழகப் பொதுக்கூட்டம்.

24—11—48 புதன்கிழமை மாலை 5-மணிக்கு குன்னூர் ஜவஹர்லால் பேட்டையில் இளைஞர் மறுமலர்ச்சிக் கழகத்தின் சார்பாக ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் கிருட்டினசாமி அவர்கள் தலைமை வகித்தார் ஈரோடு தோழர் எஸ். அப்பாவு அவர்களும், திருச்சி தோழர் சஞ்சீவிராசு அவர்களும், கழகச் செயலாளர் கோவிந்தராசு அவர்களும்திராவிடர் கழகத்தின் நோக்கத்தைப்பற்றியும், அதன் அவசியத்தைப்பற்றியும் மிக விரிவாகப் பேசினார்கள். மாலை 7½ மணிக்கு கூட்டம் செயலாளர் நன்றி கூறலுடன் முடிவுற்றது.

---

[15-ஜில்லாக்களில், வேலையற்று வாடி வேதனையில் உழலுவோர் எண்ணிக்கையென மந்திரியார் குருபாதம் சட்டசபையில் கூறிய கணக்கு இது. இந்தக்கணக்கில் இன்னும் 9 ஜில்லாக்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும் இதுதான் சரியான புள்ளியா என்பதும் தெரியவில்லை. லட்சக் கணக்கான வடநாட்டு அகதிகளுக்கு, வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கெடுபிடிக்குப் பயந்து, படி கொடுத்துப் பராமரித்து வரும் அரசாங்கம், தனது முன்யோசனையற்ற திட்டத்தால் 80,000-பேர்களை அகதிகளாக்கி அவர்களுக்கு ஒரு மார்க்கமும் செய்யவில்லை யென்றால், இந்தப்புத்தியை என்னென்று சொல்வது.

ஆ-ர்.]

# பாசறைத் தொழில்!

★

அறப்போருக்கு ஆயத்தமாக்க, இரவு பகலாகக் கண் துஞ்சாது நள்ளிரவில் மின் விளக்கேந்தித் தூறலையும் பொருட்படுத்தாது வெண்தாடி வீரர், சிலரோடு திரிந்து பலரோடு மாறுபட்டு எதிர் நீந்துச் செய்து ஏற்ற பாசறைத் தொழிலை நினைக்க நெஞ்சம் திடுக்கிடுகிறது.

ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பாண்டியன் நெடுஞ்செழியன், மாற்றலருடன் முரணிய காலத்து மேற்கொண்ட பாசறைத் தொழில் வேறு என்பதைப் பத்துப்பாட்டின் ஒரு பகுதியான நெடுநல்வாடையால் உணரலாம்.

இன்று காண்பது அறப்போர். அன்று கண்டது மறப்போர். அன்பை அடிப்படையாகக்கொண்டு மறந்தும் பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்காத திட்டத்தைக் கட்டுபாடாகக் கொண்டது அறப்போர். கையை ஒடித்தாலும், காலை முறித்தாலும், கண்ணைக் குத்தினாலும் இருக்குமிடத்திற்கே தீ வைத்தாலும்; தம்முடைய பெண்களைச் சேலையை அவிழ்க்கும்படியாகச் செய்து மானபங்கம் செய்தாலும் அத்தனைக்கும் பொறுத்து திராவிட நாட்டின் இலட்சியப் பாதையிலே அணிவகுத்துச் சென்று கொண்டிருக்கின்றனர் அறப்போர் வீரர்கள். இவ்வீரர்கள், வீரக்குடியிற் பிறந்த மறவர்கள். இத்தனைக் கொடுமையையும் பொறுத்துக் கொள்வதற்குக் காரணம் இல்லாமலில்லை. தீங்கிழைப்பவரும், தீங்கிழைக்கப்படுபவரும் ஒருவரே. ஓரினத்தவரே. இனத்தை இனம் பகைக்கும் இழி குணமில்லாக் காரணத்தினாலே, மனிதத் தன்மையோடு இக்கொடுமைகளை ஏற்றுக் கொள்ள நேர்ந்ததே தவிர உடலில் வன்மையில்லாமையாலோ; உள்ளத்தில் உறுதியில்லாமையாலோ—வெல்லுந்திறம் இல்லாமையாலோ அல்ல என்பதை நினைவு படுத்திக்கொள்ளவேண்டும். மாற்றானுக்கு மண்டியிடாது, தன்னுயிர்க்கு இன்னாதாயினும் ஏற்று, மன்னுயிர்க்கு வாழ்வளிக்கும் கொள்கையைக் கொண்ட அறப்போரின் தன்மையைப் பலர் அறியவில்லை. சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் தம்முள் இகலிய காலத்தில், ஔவையார் தமிழக்குடியின் சிறப்பைக் கூறி, இருவர் வெல்வது இயற்கையன்று! இருவர் போரிட்டால் ஒருவர் தோற்றே ஆகவேண்டும்! எவர் தோற்றாலும் சோழன் தோற்றான் சோழன் தோற்றான், என்றே மற்றோர் கூறுவர்! ஆதலால் சோழர் குடி தோற்றது என்றால் வென்றவருக்கும் சிறப்பில்லை என்று கூறினவுடனே, குடிப்பிறப்பின் சிறப்பினை யுணர்ந்த சோழர்கள் தம்முள் மனம் ஒன்றுபட்டு பகையொழிந்து நட்புற்றனர் என்ற வரலாறும், இனத்தை இனம் பகைக்கும் இரக்கமற்ற செயல் நிகழாமையையே எடுத்துக் காட்டுகின்றது.

தமிழனின் தலைசிறந்த பண்பில் ஒன்று போர். அறவழிவழாது அன்பு வழி நின்று அஞ்சாமல் எதிர்த்துப் பொருவதே ஆண்மை எனக்கொண்டவன். அத்தகைய அறப்போரைத் தொடங்கி போர் வீரர்களையும் தேர்ந்தெடுத்துச் சொல்லுக்குக் கட்டுப்பட்ட தூய இளைய காளை போன்ற வீரர்களை; ஏறுகளைக் களத்திற்கொண்டு நிறுத்தியுள்ளார் பெரியார். அவ்வீரர்களுக்கே பதில் சொல்ல முடியாமல் ஏங்கி, இளைத்து, திகைத்து, மனம் வீங்கி, விம்மி விழுகின்ற நிலையில் ஆட்டங் கொண்டிருக்கின்றனர் ஆளுங்கூட்டத்தினர். போர்க்களத்தில் இறக்கப்பட்டுள்ள வீரர்களோ வெற்றி பெறும் வரை வீடு நோக்கோம்—ஒன்று இந்தி ஒழியவேண்டும்; இன்றேல் தமிழகம் அழியவேண்டும் என்று முன் வைத்த காலைப் பின் வாங்காமல் உறுதியுடன் ஊன்றி நிற்கின்றனர். புண்பட்ட வீரர்களைப்போற்றிய அக்காலத் தாய்மார்களைப்போல வீராங்கனைகளும் பாசறையில்இடம் பெற்றுப் போர்க்களத்தில் உற்றுழியுதவ முன் வந்துள்ளனர்.

இந்நிலையைச் சில ஏமாளிகள், கொடி தாங்கிகள், கள்ளக்கடைக் கொள்ளையாளர்கள் எள்ளி நகையாடுகின்றனர். அவர் தம் அறியாமையைக் கண்டு இரக்கப்படுவதைத் தவிர வேறு செய்யவேண்டியது ஏதாவது இருக்கின்றதா என்று சிந்தித்ததில் இறுதியாக ஒன்று நினைவிற்கு வந்தது. அதுதான பழமையிற் கண்ட புதுமை. அதையுங் கூறிய பிறகு அறிவுதெளியவில்லை யென்றால், கீழ்ப்பாக்கத்திற்கு அனுப்பாமல் அவர்களை இன்னும் கோட்டைக் காவலில் வைத்திருப்பதால் பயனொன்றுமில்லை என்றாலும் ஆபத்து நேரிடும் என்பது மட்டும் நிச்சயம்.

தூய இளைய காளை வீரர்களைக் கொண்டு தொடுத்துள்ள இந்திப்போர், வடநாட்டுப்போர். வெற்றிபெறும்வரையில் அயர்விலர். துஞ்சலும் அஞ்சலுமிலராய் நேர்மை, கட்டுப்பாடு, அமைதி ஆரவாரமின்மை ஆகிய தன்மையோடு தமக்கு ஏற்பட்டுள்ள சமுதாய இழிவைப் போக்கிக்கொள்ள, வேற்றவனுக்கு அடிமையாகும் தன்மை அகல, அறப்போர் புரிந்து வருகின்றனர்.

அறத்திற்கு எதிர்ச் சொல்லே மறம் என்பது. மரம்—தாவரம், மறம்—வீரம். அறம்—அன்பை, இன்பத்தை அடிப்படையாகக் கொண்டது. மறம்—வீரம்-துன்பத்தை ஏற்று நிற்பது. அறவழியிலே, அன்பு வழியிலே, இன்பமாக இழிவைப் போக்கிக் கொள்ள அறிவுத் துறையிலே முயலுகின்றோம். இதற்கு மாறாக ஆட்சியின் ஆணவத்தால், இராணுவ பலத்தைக் கொண்டு, அடக்கி ஒடுக்க அதிகாரப் பதவியில் அமர்ந்துள்ளவர் எண்ணி இறங்குவரேல், கூடிய விரைவில் அவர் நாற்காலி அசைந்து, ஆணி கழன்று, சட்டம் நழுவி, காலொடிந்து, மக்கள் மன்றத்திலே நின்று ஓலமிடுங் காலம் வெகு தொலைவிலில்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

இன்பம்! இன்பம்!! இன்பம்!!!
இன்பத்திற்கோர் எல்லை
காணின்
துன்பம்! துன்பம்!! துன்பம்!!!

"ஆட்சியாளர்கள் இதனை அறிவிலிறுத்திக்கொள்ளவேண்டும். "பணத்திற்காகவோ கௌரவத்திற்காகவோ, நல்லவர்கள், ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கமாட்டார்கள். தங்களுடைய உத்தியோகத்திற்காகப் பணம் பெறுவதென்பது இவர்களுடைய விருப்பத்திற்குப் புறம்பான விஷயம். ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதன் மூலமாகப்பணம் சம்பாதிக்கும் கள்ளர்களென்று இவர்களைப் பொது மக்கள் சொல்லத்தொடங்கினால் அதை இவர்களால் சகிக்க முடியாது" என்று பிளேட்டோ எழுதிய அரசியலில் சாக்கரெட்டீஸ் மொழிந்ததாகக் கூறியுள்ளார்.

பணத்தையும் கௌரவத்தையும் விட்டு விட்டு எத்தனை மந்திரிகள் இன்று பொதுச் சேவைசெய்ய முன்னிற்பார்கள்? பொது மக்கள் கன்ன

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 43-ம் நாள் போர்.

சென்னை நவ. 30.

இன்று அமாவாசையை முன்னிட்டு 11-15 மணிக்குப் பள்ளி தொடங்கியதால் 10-45 மணிக்குத் தோழர்களான அலமேலு அம்மையார், திராவிடமணி, சாளைகபீர், கலைச்செல்வன், பி. வி. முனுசாமி ஆகிய, ஐவரும் மறியலைத் தொடங்கினர்.

தொண்டர்கள் செல்லுகையில், தன்னைக் காங்கரஸ்காரர் என்று உடையாலும் பிற சின்னங்களாலும் காட்டிக் கொண்ட ஒரு காங்கரஸ் திராவிடர், தொண்டர்களுக்கு மலர்மாலை யணிந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

# குடி அரசு

4—12—48 சனிக்கிழமை.


## "வைஷ்ணவாள் செம்பு"

—o—

இந்திய யூனியனின் மத்தியசர்க்கார் நேரடி நிர்வாகப் பொறுப்பிலுள்ள ரயில்வே இலாகாவில் நமது நாட்டு அய்யங்கார் பார்ப்பனர்கள் அடியெடுத்து வைத்தவுடன் சீர்திருத்த வேலையைச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்! இவர்களின் இந்தச் சீர்திருத்தத்தைப் பார்க்கும் போது, இந்தத் தொடக்கமே முடிவாகவும் இருந்து விடட்டும் என்றுதான் நாம் ஆசைப்படுகிறோம்.

இப்படி நாம் ஆசைப்படுவதற்குக் காரணம், இவர்களின் சீர்திருத்தப் பணியை நோக்கும் போது, அய்யர் பார்ப்பனர்கள் என்பவர்கள், அய்யங்கார் பார்ப்பனர்களைப்பற்றிக் கூறும் கிண்டல் தான் நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அய்யர், அய்யங்கார் ஆகிய இருவகைப் பார்ப்பனர்களும், பார்ப்பன சமுதாயம் பற்றிய பொதுக் காரியங்களில் தான், ஒருவர்க் கொருவர் எவ்வளவு பகையாயிருந்தாலும் — எவ்வளவு கருத்து மாறுபாடுடைய கொள்கைக்காரர்களா யிருந்தாலும்— அவைகளை யெல்லாம் அப்போது மறந்துவிட்டு ஒன்று கூடிக் கொள்வார்களே தவிர, மற்றபடி அவர்களுக்குள்ளேயே ஏதாவது தகராறு என்றால் அது மிக மிகப் பிரபலமாகவும் ருசியுள்ளதாகவும் இருக்கும். கால தேச வர்த்தமானங்களை யநுசரித்து இந்த இரண்டு வகைப் பார்ப்பனர்களும் கோவில் முறையில் சண்டை யிட்டுக்கொண்டு, கோர்ட்டுக்குப் போய் திராவிடன் பணத்தைப் பங்கு போடும் பழக்கம் இப்போது சில காலமாகக் குறிப்பிடத் தகுந்த முறையில் இல்லை யென்றாலும், சுமார்த்தப்பார்ப்பனர்களும், வடகலை அய்யங்கார்களும் சாதாரண வாழ்விலேயே சண்டை பிடித்துக் கொள்வதை சர்வசாதாரணமாகக் காணலாம். ஆனால் அவர்களோடு சற்று நெருங்கிப் பழகவேண்டும். அய்யங்கார் பார்ப்பனர்களைப் பற்றிக் குறைசொல்ல வேண்டும் என்றெண்ணுகிற அய்யர் பார்ப்பனர்கள், "போடாபோ! எல்லாம் ஒங்க வைஷ்ணவாள் செம்புதான்" என்று வேடிக்கையாகவும் அதேசமயத்தில் மானமுள்ள நெஞ்சை ஈட்டியால் குத்துவது போலவும் நறுக்கென்று கூறுவதை நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். இதற்கு அவர்களும் வேடிக்கையாக ஏதாவது திருப்பிக் கூறுவார்களே தவிர மானரோஷத்துடன் நம்மைப்போல் கைகலந்து விடமாட்டார்கள்.

இந்த "வைஷ்ணவாள்செம்பின்" ரகசியம் தெரியாதவர்களுக்கு, இதை அநுபவிக்க முடியாது. ஆகவே அந்த ரகசியத்தைக்கூறி விடுகிறோம். இது பித்தளையினாலோ தாம்பரத்தினாலோ அல்லது இரண்டுங்கலந்தோ செய்யப்படுகிற செம்பு. அடிப்பாகம் (வயிறு) பெருத்திருக்கும். வாயின் விரிவுக்கேற்றபடி கழுத்தும் இல்லாமல் கையை நுழைய முடியாதபடி கழுத்து மிகமிகச் சிறுத்திருக்கும். இந்தச் செம்பு துலக்கியவுடன் நல்ல பளபளப்பாக,முகம் காட்டும் கண்ணாடிபோலக்காட்சியளிக்கும். ஆனால் உள்ளேபோ.........! அது தான் கையை நுழைய முடியாதே, அதற்குள் புகுந்திருக்கும் பாசியை—அழுக்கை எப்படிப் போக்குவது? உள்ளே அழுக்கும் வெளியே மினுமினுப்பும் உடையதுதான் அய்யங்கார்கள் செயல்கள் என்பது இதன் ரகசியம்.

நம் நாட்டு ரயில்களில் சமீப காலத்தில் யாரேனும் பிரயாணம் செய்து, ரயில்வே ஜங்ஷன்களில் செய்யப்பட்டிருக்கும் பெயர் மாறுதல்களை உற்றுப்பார்த்திருந்தால், இந்தச் சீர்திருத்தம் என்ன என்பது தெரியும். ஜங்ஷன்களிலுள்ள உணவுக்கடைகளின் பெயர்கள் எல்லாம், சுமார் ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே மாற்றி எழுதப்பட்டிருக்கின்றன. அய்ரோப்பியன் ரெவ்ரஸ்மெண்ட் ரூம் என்பது அய்ரோப்பியன் ஸ்டைல் ரெவ்ரஸ்மெண்ட் ரூம் என்பதாகவும், இண்டியன் ரெவ்ரஸ்மெண்ட் ரூம் என்பது வெஜட்டேரியன் (சைவ) ரெவ்ரஸ்மெண்ட் ரூம் என்பதாகவும், முஸ்லிம் டீ ஸ்டால் என்பது ஜெனரல் டீ ஸ்டால் என்பதாகவும் புகுத்தியும் மாற்றியும்எழுதப்பட்டிருக்கிறது.

இந்தப்பெயர் மாற்றத்திற்குக் கோபால்சாமி அய்யங்கார் ஒருவர் மட்டும்தான் பொறுப்பா? அல்லது சந்தானமய்யங்காரும் சேர்ந்தா? என்பது எப்படியிருந்தாலும், இந்தப் பெயர் மாற்றம் "வைஷ்ணவாள் செம்பை"த்தான் நினைப்பூட்டுகிறது.

"மதம், இனம், ஜாதி, ஆண் அல்லது பெண்ணாயிருத்தல், பிறந்த இடம் ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றின் காரணமாக எந்தப் பிரஜைக்கும் எதிராகச் சர்க்கார் பாரபட்சமாக நடக்கக் கூடாது" என்று 4-நாளைக்கு முன் அரசியல் நிர்ணய நாடக சபாவில் நிறைவேற்றப்பட்டிருக்கிற, "அடிப்படைஉரிமை"என்கிற தீர்மானம் இருக்கிறதே அதை முன்னறிந்து பிரதிபலித்ததுதான் இந்த ரயில்வே கடைகளின் பெயர் திருத்தம் என்றாலும் சரி. தீர்மானம் எப்படிப் பிறநாட்டவர்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு, உள்நாட்டில்வர்ணாச்சிரமப் பாகுபாடும் அதன் வக்கிரமப் போக்கும் தலைவிரித்தாட இடங் கொடுக்க உதவுகிறதோ, அதைப் போலவே தான் பெயர்திருத்தமும் வெளித் தோற்றத்தில் மிகவும் உயர்ந்த சமத்துவ முறையிலும் நடை முறையில் வர்ணாச்சிரம முறையிலும் அமைந்திருக்கிறது.

நமது நகைச்சுவை யரசு என். எஸ். கே. அவர்கள் கூறுவது போல், திராவிட நாட்டிலேயே தீண்டாமை இல்லாத இடம் ரயில்களும் ரயில்வேக்களும்தான். தீண்டாமையைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாத இந்தத் திராவிட நாட்டு ரயில்வே நிலையங்களில் மட்டும் எதற்காக இந்தப் பெயர் மாற்றம்? இந்து-முஸ்லிம் வித்தியாசத்தை நீக்குவதற்காக என்றால் அது நம் திராவிட நாட்டைப்பொறுத்தவரையிலும், இல்லாத ஒன்றை உண்டென்று பெயர் பண்ணி, அதை ஒழித்துக்கட்ட முயலும் முயற்சியாகும். இந்து—முஸ்லிம் 'சாயா'க்களுக்கு இடமும், அதை

பொட்டி மதவெறிக்கு இடமுமாக இல்லாத திராவிடநாட்டில், தென்னாட்டு அய்யங்கார்பார்ப்பனர்கள் ஏன் இந்தத் திருத்தத் திருப்பணியில் இறங்கவேண்டும்?

பழைய, இண்டியன் ரெவ்ரஸ்மெண்ட்ரூமை எடுத்துக்கொண்டால் சமைப்பதும், அதைச் 'சப்ளை' பண்ணுவதும், அதை ஏற்று நடத்தும் 'மானேஜிங்' பொறுப்பும் பார்ப்பன சமூகத்துக்கே ஏகபோகமாயிருந்து வந்திருக்கிறது. இப்போது இண்டியன் ரெவ்ரஸ்மெண்ட் ரூம் என்பது வெஜட்டேரியன் ரெவ்ரஸ்மெண்ட்ரூம் என்று மாற்றப்பட்டிருப்பதால் சமைப்பவர்கள் மாறிவிடுவார்களா? சப்ளையர்கள் மாறிவிடுவார்களா? மானேஜர்கள் மாறிவிடுவார்களா? அதாவது சைவ உணவு தயாரிக்கும் மற்ற திராவிடர்களும், வெஜட்டேரியன் ரெவ்ரஸ்மெண்ட்டை ஏற்று நடத்த அய்யங்கார்களின் இந்தத் திருத்தம் பயன்படுமா? அப்படியில்லாத வரையிலும் ஏன் இந்தக் கண்துடைப்பு வேலை?

இனி, வடநாட்டைப்பொறுத்த வரையிலும் கூட இது பயன்படுமா? உண்மையான சீர்திருத்த வேலையாகுமா? என்றால், அதுவும் இல்லை என்கிற முடிவுக்குத்தான் வரவேண்டும். இந்துச் சாயா தயாரிப்பவர்கள், இனியும் இந்துக்களாகத்தானிருப்பார்கள். முஸ்லிம் சாயா தயாரிப்பவர்கள் இனியும் முஸ்லிம்களாகத்தான் இருப்பார்கள். இப்படியாக வடநாட்டுக்கும் இந்தப் பெயர் மாற்றம், மத வித்தியாசம்—ஜாதி வித்தியாசம் ஆகியவற்றை ஒழிப்பதற்குப் பயன்படாது என்றால் வேறு எதை முன்னிட்டு இப் பெயர் மாறுதல்?

அரசியலில் நாங்கள் தான் மெஜாரிட்டி என்று கூறி, அதற்கு அனுசரணையாகப் பல பெருங்குடி மக்களிலிருந்து விபீஷணர்களை தயார்செய்த காங்கரஸ், பழங்குடி மக்களான ஆதித்திராவிடர்களை அன்று 'ஹரிஜனங்'கள் என்று பெயர் மாற்றம் செய்து, அவர்கள் வாழ்வுக்கு எந்த மாறுதலையும் செய்யத் துணியவில்லையோ அந்த வழியைத்தான் மத்திய அரசாங்க ரயில் மந்திரிகளான அய்யங்கார்களும் பின்பற்றியிருக்கிறார்கள். காங்கரசின் அன்றைய நடத்தை எப்படி வெள்ளையன் கண்ணை மறைக்கப் பயன்பட்டதோ, அப்படியே இன்று திராவிடன் கண்ணை மறைக்க இந்தப் பெயர் மாற்றம் பயன்படட்டும் என்று கருதியிருக்கிறார்கள். இன்று திராவிட நாட்டில், ஆரியரின் அக்கிரமச் செயல்கள்மீது வெறுப்பும், வடநாட்டுச் சுரண்டலையொழிக்க வேண்டுமென்கிற உறுதியும், மத்திய அரசாங்கப் பிணைப்பிலிருந்து விடுபட வேண்டுமென்கிற அவசியமும், வர வர வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்துவிட்டது. மத்திய அரசாங்கத்தின் கையில் 'லகான்' இல்லாமல், மாகாணங்களுக்கே சுயாட்சி என்று, எந்தவடிவத்திலோ அமையப்போகிற ஆட்சி உரிமை அமைந்து விட்டால், எப்படியும் பார்ப்பனர்கள் மற்றவர்களோடு ஒத்த முறையில்தான் வாழவேண்டியதாய் வரும் என்பதை நன்கு அறிந்து கொண்டார்கள். பிரிவினை இல்லாத வரைக்கும், இந்த நாட்டிற்குப் பார்ப்பனர்கள் வைத்ததுதான் சட்டம் என்பதையும் கண்டுகொண்டவர்கள். திராவிடனுக்கு மத்திய அரசாங்கத்தின் மீது வளரும் வெறுப்பைப்போக்க வேண்டும். அதே நேரத்தில் மாகாண சர்க்கார் மீது ஒரு அவநம்பிக்கையையுண்டுபண்ண வேண்டும். அதாவது மத்திய அரசாங்கம் பார்ப்பனர்களுக்கே ஏகபோகமிராசாய் இருந்தும் கூட, வைதீக சிகாமணிகளான அய்யங்கார் பார்ப்பனர்கள் ரயில்வே மந்திரிகளாயிருந்தும்கூட, அவர்களுடைய நிர்வாகத்தில் மத வித்தியாசம்—ஜாதிவித்தியாசம் போக்கடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாகாணசர்க்காரோ அதற்கடங்கிய ஸ்தல ஸ்தாபனங்களோ இந்தக் காரியத்தைச் செய்ய முன் வரவில்லை என்கிற எண்ணத்தைவளர்க்க வேண்டும். இந்த அளவுக்குத்தான் இந்தப் பெயர் மாற்றம் பயன்படுத்தலாம் என்றெண்ணப்படுகிறதே தவிர வேறு என்ன?

உண்மையாகவே மதவித்தியாசம் ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டுமென்கிற ஆசை நம் அய்யங்கார்களுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பது உண்மையானால், பெயர் மாற்றம் நடந்தபோதே மாகாண சர்க்கார்களுக்கும் உத்திரவு போட்டிருக்கவேண்டும். நாட்டின் எந்த மூலையிலும் எந்த ரூபத்திலும் ஜாதி, மத வித்தியாசம் வெளிப்படாதிருக்க வகை செய்திருக்க வேண்டும். பெயர்மாற்றம் செய்த அன்றே இதற்கு ஏற்பாடு செய்யவில்லையென்றாலும் இனியாவது மாகாண சர்க்கார் பின்பற்றுவதற்கான வழிவகை செய்யப்படுமா என்றால் அது இவர்களால் ஆகக்கூடிய காரியமல்ல வென்றேஉறுதியாகச் சொல்லுவோம்.

ஆலயப் பிரவேசத்தை அனுமதித்துச் சட்டம் செய்துவிட்டு, மாகாண சர்க்கார் பல இடங்களில் முகத்தில் கரிபூசிக் கொள்ள வேண்டியதாய் ஆகிவிட்டது. இந்த வெட்கம் கெட்ட நிலையை வெளியில் சொல்லவு முடியவில்லை, விழுங்கவு முடியவில்லை. அந்த நிலையில், பொது இடங்களில் அடிப்படையான பிரஜாவுரிமையைக் காப்பாற்ற மாகாண சர்க்கார் எந்த நியாயத்தால் முன்வந்துவிடமுடியும்? வேண்டுமானால் ஆலயப் பிரவேச சட்டத்தைப்போல் மாகாண சட்டசபைகளும் ஏட்டில் நிறைவேற்றிக் கொண்டிருக்க முடியுமே தவிர, நாட்டு நடப்பில் அதை எப்படிச் செயல் படுத்திக் காட்ட முடியும்?

ஜாதியின் பேரால் தெருக்களுக்குப் பெயர்! ஜாதி மதங்களை பொட்டிக் கடைகளுக்குப் பெயர்! என்றிருக்கிற இழிநிலையை ஆங்காங்கே ஸ்தல ஸ்தாபனங்கள் தான் நீக்கவேண்டும் என்றிருக்கும் இப்போதைய சட்டத்தை நாமறிவோம். ஆனால் மற்றகாரியங்களில் ஸ்தல ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்தி வரும் மாகாணஅரசாங்கம், ஏன் இந்தக் காரியத்தில் தனக்கு நியாயம் என்று படுகிற ஒரு விஷயத்தைக் கட்டாயப்படுத்தக்கூடாது? அதைப்போலவே மற்ற காரியங்களில் மாகாணங்களைக் கட்டாயப்படுத்தும் மத்திய அரசாங்கம் இந்த விஷயங்களில் ஏன் கட்டாயப்படுத்தக் கூடாது? மத்திய அரசாங்கத்துக்கு உண்மையில் ஜாதி மத வேறுபாடுகளைப் போக்கவேண்டுமென்கிற கவலையிருக்குமானால், பிரஜா உரிமை பற்றிய தீர்மானம் எந்த வடிவத்தில் இருக்கவேண்டும்? மதம், இனம் முதலியவற்றின்காரணமாக எந்தப் பிரஜைக்கும் எதிராகச்சர்க்கார் பாரபட்சமாகநடக்கக்கூடாது என்கிற தீர்மானம் மதம், இனம், ஜாதி, ஆண் அல்லது பெண்ணாயிருத்தல் பிறந்த இடம் முதலியவற்றால் வித்தியாசம் இருக்க வேண்டுமென்றுவற்புறுத்துகிறதா? அல்லது அவ்வித்தியாசங்களை

# நம் நாட்டுச் செல்வம்?

★

"டேய்! சேட் வண்டி கொண்டு வரச் சொல்லுகிறார், சீக்கிரம்"

இது ராம்தாஸ் சேட்டிடம்வேலைக் கிருக்கும் குப்புசாமி திராவிடரின் கட்டளை—குப்புசாமி தன் இனத் தைச்சேர்ந்த மாணிக்கத்திற்கு இட்ட கட்டளை.

மாணிக்கம், இரக்கமற்ற இனத்தைச் சேர்ந்த ராம்தாஸ் ஆரியரின் வண்டிக்காரர்—சேட்டின் கோச்சுவண்டி ஓட்டுபவர். குப்புசாமி அந்த ஆரிய ராம்தாஸை எசமானாகக் கொண்டு அவன் தயவால் வாழுபவர்—இன உணர்ச்சி பெறாத காரணத்தால்.

ராம்தாஸ் முதலில் அவ்வூருக்கு வருகையில் கடலை விற்கும் கைவண்டியுடன் வந்தவன். இன்று அவன், தான் பெறமுயும் என் மனக்கோட்டை கூடக் கட்டியிராத ஒரு மோட்டாரையும், ஒரு கோச்சுவண்டியும் பெற்றவனாயிருந்தான்—தன் சுரண்டல் திறமையினால். இன உணர்ச்சி பெறாத காரணத்தால்—கடலை விற்க வந்த நாடோடிப் பயலிடம் மான உணர்ச்சி யின்றி வேலைக்கமர்ந்து, அவன் கூறுவதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டு வாழுகிறோமே, இது சரியா என்று சிந்திக்காத காரணத்தால்—அவனிடம் அடிமையாக வாழ்ந்து வருபவர் குப்புசாமி. இன உணர்ச்சி யிருந்தும் தான் அடைந்துள்ள கடனை நிவர்த்தி செய்ய, வாய் பொத்தி, கைகட்டி வண்டி ஓட்டுபவராக வாழ்பவர் மாணிக்கம்.

வண்டி கொண்டு வந்து சேட் வீட்டு வாசற்படி முன் நிறுத்தினார் மாணிக்கம். கடலை வண்டி ஓட்டுகையில் 5½-அடி உயரமும், ஒட்டிய வயிறுமாயிருந்த சேட், இன்று 5½-அடி உயரமும், ஒரு பெரிய பூசணிக்காய் அளவுக்கு பெருத்த தொந்தியும் உடையவராய், கையில் ஒரு கைத்தடியுடன் முன்னே வந்தான்—வண்டியில் அமர. அவன் பின்னே அவனது கதர்க்குல்லாயை கையிலேந்திய வண்ணம் வந்தார் குப்புசாமி. சேட் வண்டியில் கஷ்டப்பட்டு ஏறி உட்கார்ந்தான். அப்போது அக் குதிரைக்கு பேசும் சக்தி யிருந்திருப்பின் கூறியிருக்கும்—"நாடோடிப் பயலே, உன்னை நான் இழுத்துச்செல்ல வேண்மென்ற நிலையை ஏற்படுத்தியவர்களுக்கு கடுகளவேனும் இன உணர்ச்சியில்லை போலும்" என. அந்த சேட் வண்டியிலமர்ந்த பின் குல்லாயை மரியாதையுடன் அளித்தார் குப்புசாமி. சேட் ஏதோ சில வார்த்தைகளை உளறினான் குப்புசாமியிடம்—குப்புசாமியும் பதிலுக்கு உளறினார். அந்த உளரல் வார்த்தைகள் தான் அடிவயிற்றிலிருந்து எழும் வடநாட்டு இந்திமொழி. சேட்டும், குப்புசாமியும் உளறிக்கொண்டிருக்கையில் அவ்வழியே அதைக்கேட்டுக் கொண்டு சென்ற 'நான்' எண்ணினேன்—"இப்படிப்பட்ட வடநாட்டு பையல்களுக்கு வால் பிடித்துத் திரியும் தனமானமற்றவர்களுக்கல்லவா இந்தி கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டும்—என் தம்பி, தங்கை போன்ற சிறுபிள்ளைகளுக்கு ஏன் வடநாட்டு இந்தி கட்டாயமாக்கப்பட்டுள்ளது—இதில் ஏதோ சூது உள்ளது என்று."

வண்டி சென்றது வேகமாக,விமான நிலையத்திற்கு. அங்கு வடநாடு செல்லும்—ராமதாஸை விட பெருத்த தொந்தி படைத்த ராம்துலா சேட்யாருடைய வரவையோ எதிர்பார்த்தவனாயிருந்தான். ராம்தாஸும், ராம்துலாவும் சந்தித்துப் பேசினர். பேசி முடிந்தபின், ராம்தாஸ் தன்னுடன் கொணர்ந்திருந்த ஒரு பெரியகத்தை ரூபாய் நோட்டுகளை கொடுத்தனுப்பினான்—தன் நாட்டிலுள்ள குடும்பத்தாரிடம் கொடுக்கும்படி கூறி. விமானம் பறந்தது தென்னாட்டை விட்டு, வடநாட்டை நோக்கி. இதைக்கண்ட மாணிக்கம், "இம்முறையில்தானா நம் நாட்டுச் செல்வம் கொள்ளை போகிறது—கல்லினால் செதுக்கப்பட்டு கடவுள் எனக் கூறப்படும் சிலையிலிருந்து கல்நெஞ்சம் படைத்த மனிதப் பிண்டம் வரை—எத்தனையோ முறைகளில் சுரண்டப்படுகிறதே! இதற்கு இல்லையா அடக்கு!முறைச்சட்டம் அரசாங்கத்தினிடம்" என்று நினைத்தார். மாணிக்கம் எண்ணினது தவறா? சரியா? இன்றைய சமதர்மக்கொள்கை இதுதானா? என்பனவற்றைச் சிந்திக்கும் பொறுப்பை வாசகர்களிடையே விட்டு விடுகிறேன்—வாசகர்கள் சிந்திப்பார்கள் இதைப்பற்றி என்ற நம்பிக்கையுடன்.

"பாரத் செயபால்"

---

ஒழித்துக்கட்டவேண்டு மென்கிறதா? வித்தியாசங்கள் இருக்கத்தான் வேண்டும். அவைகளை ஒழித்துவிட வேண்டுமென்பது நோக்கமல்ல என்பதை இந்தத் தீர்மானமே வெளிப்படுத்தவில்லையா?

ஜாதிமத வித்தியாசத்தை—உயர்வு தாழ்வை—பிறப்பைக் காட்டியே ஒருவன் சுகவாழ்வு வாழ்வதற்கும் அதனாலேயே மற்றொருவன் துயரவாழ்வு வாழ்வதற்குமான நிலைமையை—இந்த அரசியல் நிர்ணய சபாவின் அடிப்படை பிரஜாவுரிமைத் தீர்மானம் எப்படி நீக்கி விடாதோ, அது எப்படி மற்ற நாட்டவர்களின் முன்பு தன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளவும் சமத்துவமான நாடு என்று விளம்பரம் செய்யவும் பயன்படுமோ அப்படித்தான் அய்யங்கார்களின் நடவடிக்கையும் "வைஷ்ணவாள் செம்பாக"த்தான் இருக்கிறது. அதனால்தான் இந்தக் கண்துடைப்பு நாடகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டுமென்கிறோம். ஏன்? திராவிடன் வெள்ளையனைப் போல வெளிநாட்டான் அல்ல.

★

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ரென்றாலும், கசடரென்றாலும் மொழியைக்கெடுக்கும் மூர்க்கரென்றாலும் இவ்வளவிற்கும் அசைந்து கொடுக்காத பிடாரிக்கல்லாக, உடும்புபோல உத்தியோகத்தையற்றிக்கொண்டு, அட்டைபோல அரசாங்கப்பணத்தைஉறிஞ்சிக்கொண்டு வாழ்வதே பொதுஜன சேவை—உத்தியோகலட்சணம் என்றால்; இவர்களோடு எவ்வாறு நாம் போரிடுவது? இவ்வாறு எண்ணி எண்ணி இறுதியாக அறப்போரை அடிப்படையாகக் கொண்டு, ஆளுவோர்க்கு உள்ள அறிவைத் தெளிவு படுத்தி, அதன் பலனாக ஏதாயினும் நன்மை ஏற்படாதா என்ற நோக்கத்தினாலேயே தொடங்கப்பட்டுள்ளது அறப்போர்.

இத்தகைய அறப்போரை—அறப்போர் வீரர்களை—வீரத்தாய்மார்களை—அடக்கிச் சிறைப்பிடிக்கத் துணிந்தால் அறப்போர் வீரர்களின் வலிமையைக் காண அரைக்கணமே சாலும்.

பண்டைத் தமிழ் மறவர் எவ்வாறு போரிட்டனர் என்பதை நினைவு படுத்தும் நேரமேதேவை. பின் விளைவு என்னவாகுமென்பது இப்பொழுது கூறமுடியாது. ஆனால் சிந்திக்கமுடிகிறது. அது பெரியார்க்குப் பின் காணலாம்.

மார்ச்சு, அக்டோபர்—என்று அண்ணா அறிவுறுத்திய வரலாற்றை நினைவு படுத்தித் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் விளக்கங்கூற கேட்டுக் கிறுகிறுத்துப்போன நீங்கள்—பாண்டியன் அன்று நடத்தியபோர்க் களத்தோற்றத்தில் பாசறைத்தொழிலை மட்டும் படித்து நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

குளிர்காலம்! மாலைவேளை! இருள் வருகின்றது! வாடைக் காற்று வீசு

கின்றது! விளக்கு ஏற்றியாயிற்று! வாடைக்காற்று அடிக்குந்தோறும் விளக்கின் பருத்தகொழுந்து அசைகிறது! தெற்குநோக்கி எழுந்து சாய்ந்து எரிகிறது! வேந்தன் வாடைக்கு வருந்தாது வெளிப்பட்டான்!

முகத்தில் அழகிய பொன்பட்டம் கொண்ட, போர்ப்பயிற்சிபெற்ற யானைகள் பல. வேந்தனின் வீரர்கள் கரியபெரிய யானையினுடைய நீண்டதிரண்டகையை வெட்டிவீழ்த்தினர். யானையையுங்கொன்றனர். அத்தகைய வீரர்கள், முகத்திலும் மார்பிலும் அம்பினால் தைக்கப்பெற்ற சிறந்த புண்ணை ஏற்றனர். புண்பட்ட வீரர்கள் பாசறைக்குக் கொண்டு வரப்பட்டனர். விழுப்புண்பட்ட வீரர்களைக் கண்டு ஆற்று மொழிகளைக்கூறி அவர்களைத் தேற்றவேண்டி ஓடோடியும் வருகின்றான் மன்னன். அந்த நடுயாம, குளிர்நேரத்தில்.

வாடைக்கு மெலிந்து, விளக்கு அங்கங்கே ஒளியிழந்து ஆடுகின்றது. வேப்பமாலையைத் தலையிலணிந்த படைத்தலைவன் கையில் வேலேந்தி வேந்தன்முன் செல்லுகின்றான். புண்பட்ட வீரரை அடைவே அடைவே காட்டுகின்றான். இடைவழியோ சேறு, வாடைக்காற்று, சிறு மழைத் தூறல், மின்னலோடு கூடிய இருட்டு. குதிரைகள் வாடைக்கு ஆற்றாது உடம்பு சிலிர்க்கின்றன. சிலிர்ப்பில் சிதறிய நீர்த்துளிகள் மன்னன் முகத்திற்படுகிறது. இவ்வளவிற்குஞ் சலியாது இடத்தோளினின்றும் நழுவி விழுகின்ற அழகினையுடைய ஒலியலை—(மேலாடையை) இடப்பக்கத்தே அணைத்துக் கொண்டான். வாளைத் தோளிலே சேர்த்து அஞ்சாமையை யுடைய மெய்க்காப்பாளன் தோளிலே வலக்கையைப்போட்டுக் கொண்டு—புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சி தோன்ற முகங்காட்டி வருகின்றான், மக்கள் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.

''நள்ளென் யாமத்தும் பள்ளி
கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத்
தொழிலே.''

யானை, குதிரை, வீரர், வாள், பாசறை, வாடை, நள்ளிரவு இவ்வளவே நினைவு வைத்துக்கொள்ளுங்கள் போதும்—வேண்டிய காலத்தில் மற்றவற்றை நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

இப்பொழுது மேற்கூறியவற்றில் காளைகளைத் தவிர கருவியொன்றுமில்லாத நாம், ஆற்ற அறப்போரையன்றி வேறெவ்வகைப் போருக்கும் வழியில்லை. காந்தியார் காட்டிய வழி, பெரியார் போற்றும் வழிச்செல்வோம். வெற்றி உறுதி. அதே காலத்தில் சாவும் உறுதி.

புலவர்—அழகுவேலன்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நான் அறியேன். அந்த வாசகத்தை வைத்துக் கொண்டு கிண்டல் செய்கிறது ''காண்டீபம்'', கருவியைக் குருவி என்று சொன்னார் என்பதை உண்மை என்றே வைத்துக் கொள்வோம்! இந்த நிலையில் ஒரு மந்திரியாரே இருந்தால் மக்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. உனக்கு உன் இனமக்களின் மீது சிறிதளவேனும் அக்கரை இருக்குமேயானால், நீயும் அறிவுடையவனாக இருப்பாயானால், அதைக்கண்டு நீ வெட்கப்படவேண்டாமா? அந்த நிலையை மாற்ற முயற்சிக்கவேண்டாமா? அதுதானே அறிவுடைமை! ரோட்டில் ஒரு பைத்தியக்காரன் சென்றால் அவன் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு பயித்தியத்தை மாற்ற முயற்சி எடுக்காது, அவன் மீது கல்லெறிந்தால், அவனைவிட கல்எறிபவனல்லவா பெரிய பையித்தியக்காரன். அதைப் போலல்லவா உன் செய்கையும் இருக்கிறது.

ஏ! செத்தபதுமையே! நீயே சொல்லுகிறாய் கருவியைக் குருவி என்று சொன்னார் என்று. இதை நீ சொன்னால் என்ன, நாங்கள் சொன்னால் என்ன? தமிழ்க் கொலை கொலைதானே! இதை உன்னால் மறைக்க முடியுமா? நாங்கள் தமிழில்மேதாவிகள், நீங்கள் தான் தமிழ்க்கொலை செய்கிறவர்கள் என்று கிண்டல் செய்து விட்டால் அக்குறை நீங்கிவிடுமா? ஆட்சி பீடத்தில் இருக்கக்கூடியவர்கள் இப்பேர்ப்பட்ட தமிழ்க் கொலையைத்தடுக்க முயற்சி எடுக்கவேண்டாமா? இதைக்கேட்டால் எங்கள் மீது சீறி விழுகிறாயே! நாங்கள் என்ன இந்த நாட்டின் பிரஜைகள் இல்லையா? அறிவுகெட்டபதுமையே! இதற்குஎன்ன சொல்லுகிறாய்? நீ எங்கே பதில் சொல்லப்போகிறாய். அவ்வளவு சொரணை உள்ளவனா நீ? சொரணை இருந்தால் இதற்குள் நீ ஈரோட்டிற்கு வந்திருப்பாயே!

மேலும் பதுமை கேட்கிறது. ஜஸ்டிஸ் மந்திரிகள் காலத்தில் தமிழுக்காகசாதித்தது என்ன என்று. நான் கேட்கிறேன், ஜஸ்டிஸ் மந்திரிகளைவிட காங்கரஸ் மந்திரிகள் சாதித்ததை, மலையத்தனைவேண்டாம், மயிர் அளவு சொல் பார்க்கலாம். சரி வாதத்திற்காக நீ சொல்வதை ஒப்புக்கொள்கிறேன், ஜஸ்டிஸ் மந்திரிகள் தமிழுக்காக ஒன்றும் செய்யவில்லை என்று. ஜஸ்டிஸ் மந்திரிகள் சாதிக்காததைச் சாதிக்கத்தானே நீங்கள் ஆட்சி பீட மேறினீர்கள். இப்பொழுது நீங்கள்சாதித்தது என்ன என்று உங்களைக் கேட்டால், இதற்குப் பதில் சொல்லாது, ஜஸ்டிஸ் மந்திரிகள் என்ன சாதித்தார்கள் என்கிறாயே! இது நேர்மையான பதிலா? இப்பதிலை அவர்களிடம் எங்களைக் கேட்கவிட்டு நீங்கள் ஒதுங்கிவிட வேண்டியது தானே! அந்தயோசனையைஉனது மந்திரி சகாக்களுக்குச் சொல்வதை விட்டு நாலுகால் பாய்ச்சலில் எங்கள் மீது பாய்கிறாயே ஏன்? உன்னையும்தான் கேட்கிறேன். நீ தமிழுக்காக இதுவரையிலும் என்ன செய்தாய்? திரு என்பதற்குப் பதிலாக ஸ்ரீ என்கிறாய், முன்னாள் என்பதற்கு, மாஜி என்கிறாய். இது போலவே நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது தமிழ்க் கொலை செய்து வருகிறாய் ''காண்டீபத்தில்''. இந்த லட்சணத்தில் எங்களைக் குறை கூறுகிறாய்! அட மரக்கட்டையே!

''தூத்துக்குடி வாலி''

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 44-ம் நாள் போர்.

சென்னை டிச 1.

நேற்றைய தொண்டர்கள் அய்வருமே இன்றும் தலைவர் வீட்டிலிருந்து புறப்பட்டு பல தெருக்களின் வழியாக வந்து 9-40-க்கு மறியலைத் துவக்கினர்.

மாணவர்கள் சிலர், தொண்டர்களுக்கெதிரில் இந்திப் புத்தகங்களைக் கொளுத்தி இந்தி ஒழிக எனக் கூவி மலர்மாலை சூட்டிச் சென்றனர்.

தொண்டர்கள் திரும்பும்போது பல புதிய தெருக்களின் வழி வந்தனர். போலீசாரும் வரும்போதும் திரும்பும்போதும் பின்பற்றினர்.

## வசதி உண்டா?

உழுது-பயிரிட்டு-அறுவடைசெய்து-காய்ச்சலிட்டு—நல்ல தலையுதிர் நெல்லாக அளக்கிற உழவனுக்கு வேண்டிய உழவுக்கான கருவிகள், எரு முதலியன தாராளமாகக் கிடைக்க வசதி உண்டா?

[4ம் பக்கத் தொடர்ச்சி]

வுடையதென்றுஎன்னால்ஒப்புக்கொள்ளவே முடியவில்லை. பெண்களைப் பற்றித்தான் எப்படிக் குறைகூற முடியும்? அழகும் இளமையும் கூடிய எந்தப் பெண்ணும் தனித்து வாழச் சமுதாயத்தில் இடமும், நாட்டில் பாதுகாப்புமில்லையே? நாட்டில் விபசாரம் வளர்கிறது—பெருகுகிறது; இதை ஒழிக்கவேண்டுமென்று ஆண்கள் கூச்சல் போடுகிறார்கள். விபசார வளர்ச்சிக்குக் காரணம் பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் கூடத்தான்! ஆண்கள் யோக்கியர்களாகவும் நல்ல மனிதர்களாகவுமிருந்தால் பெண்கள் எப்படி விபசாரிகளாவார்கள் என்பன போன்ற கேள்விகள் எழுந்து என் எண்ணத்தைக் குழப்பிக்கொண்டிருந்தது. நேரமாகிவிட்டது, வீட்டுக்குப் போகலாமென்பதை ஆபீஸ் கடிகாரம் மணியடிப்பதன்மூலம் அறிவித்தது.

ஆபீஸை விட்டு வெளியேறி நேராக ரூமைநோக்கி நடந்தேன். முன்தினத்தைபோலவே இன்றும் என்னைக்கண்டவுடன் ஜாடையாகஅழைத்தாள். உள்ளத்தில் ஏதோ விவரிக்க முடியாத சபலம் தட்டியதால் தயங்கி நின்றேன். ஒரு சிறுவன் ஓடிவந்து அந்த அம்மாள் என்னை அழைப்பதாகச் சொன்னான். இரவு வருவதாக என்னைக் கேட்காமலேயே என்வாய் சொல்லி விட்டது. மறுவிநாடி பிரமை பிடித்தவன்போல்ஆற்றங்கரையை நோக்கி நடந்தேன்.

ஆற்றின் நடுவில் தெளிந்தநீர் சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது. மேற்றிசையில் மறையப்போகும் சூரியனின் பொற்கிரணங்களால் ஆற்று மணல் தங்கப்பொடி தூவியதுபோல் மினுமினுத்துக் கொண்டிருந்தது. அந்தி வானத்தின் திறந்த வெளியில் வானம்பாடிகள் உல்லாசமாகப் பாடிக்கொண்டிருந்தன. இலையுதிர் காலமாகையால் கரையின் ஓரங்களிலுள்ள மரங்களிலிருந்து உதிர்ந்துகிடந்த சருகுகள் அப்பொழுது வீசிய தென்றல் காற்றினால் தரையில் கலகலவென்று புரண்டோடியது. இந்த இயற்கையின் விளையாட்டுகளும், எழில்நிறை தோற்றங்களும் கூட என் உள்ளத்திற்கு அமைதியளிக்கவில்லை. போவதா? வேண்டாமா? என்ற கேள்விகள் என் உள்ளத்தில் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. கேவலம் மிருக உணர்ச்சியைப் போக்கிக் கொள்ளவேண்டும் என்ற ஆசையில்லாவிட்டாலும் "அதையும்தான் பார்ப்போமே" என்ற அசட்டுத்தனமான முடிவிற்கு வந்தேன்.

எழுந்து, நேராக உணவு விடுதிக்குச் சென்று சாப்பிட்டு விட்டு ரூமிற்கு வந்து அங்கு போவதற்கு என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். உணர்ச்சியால் உந்தப்பட்ட நான் இந்த வேலைகளையெல்லாம் ஓர் நொடிக்குள் முடித்து விட்டுப் புறப்படுவதற்கு தயாராக இருந்தேன்.

வீட்டை விட்டு வெளியில் வந்தேன். அகன்று கிடந்த வானத்தில் கருமை படிந்திருந்தது. அது என் வாழ்வில் ஏற்படப்போகும் கறையை அறிவுறுத்துவது போல் தோன்றியது. வெள்ளிப்பணம் சிதறிக்கிடப்பது போல் கருநீல வானத்தில் தாரகைகள் ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. பஞ்சாயத்து போர்டாரின் கருணையால் எரிந்து கொண்டிருந்த கல் விளக்குகள் கடமைக்கு முணுமுணுத்துக்கொண்டிருந்தது. நானும் அந்த வீட்டை நோக்கி வெகு விரைவாகச் சென்றேன். என் வரவிற்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தவள் என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். அச்சத்திற்கும் ஆசைக்குமிடையில் உள்ளம் ஊசலாடிக் கொண்டிருந்தது.

நான் உள்ளே சென்றவுடன் அவள் எங்கோ போய் மறைந்து கொண்டாள். அவளுடைய இந்தச் செயலைக்கண்டவுடன் வியப்பாகவேயிருந்தது. ஒரு வேளை அவளுக்கு வெட்கமேற்பட்டிருக்குமோவென்று எண்ணினேன். சே! இதெல்லாம் வெறும் ஏமாற்றும் வித்தை என்று என் உள்ளம் பதில் கூறியது. இதற்குள் ஒரு கிழவி என்னை வரவேற்று ஒரு அறையைக் காட்டி அங்கு போய் உட்காரும்படி வேண்டிக்கொண்டாள்.

அந்த அறை வர்ணப்படங்களாலும், காகிதப் பூவினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு போடப்பட்டிருந்த கட்டிலில் விரிக்கப்பட்டிருந்த மெத்தையில் உட்கார்ந்தேன். அந்தக் கட்டிலும் மெத்தையும் என்னைப்போல் எத்தனை அப்பாவி மனிதர்களைப் பார்த்திருக்குமோ? அந்த அறையை மீண்டும் ஒரு முறை சுற்றிப்பார்க்க ஆரம்பித்தேன். கட்டிலின் அருகில் போடப்பட்டிருந்த மேஜையின் மேலிருந்த தந்தத்தால் செய்யப்பட்ட யானை அப்பொழுதுதான் ஏற்றிவைக்கப்பட்ட ஊதுவத்திகளைச் சுமந்து கொண்டிருந்தது. அதிலிருந்து கிளம்பிய நறுமண வாடை அறை முழுதும் பரவியது. ஆனாலும் என் உள்ளத்தில் மட்டும் ஏதோ ஒருவகையான குழப்பம் சூழ்ந்து கொண்டிருந்தது. அந்த மேஜையின்மீது கிடந்த புத்தகத்தையாவது எடுத்துப் பார்த்துக் கொண்டிருப்போமேயென்று அதை எடுத்துப் புரட்டினேன். புத்தகத்தைத் திறந்தவுடன் எனக்குத் தூக்கி வாரிப் போட்டு விட்டது! அந்தப் புத்தகம் இங்கே வரவேண்டிய காரணம் என்னவென்பதே புரியவில்லை! ஒரு வேளை......அவள் இங்கு...... என்று என் உள்ளம் தடுமாறியது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நான் கமலத்தை விட்டுப் பிரியும் பொழுது என் காதல் பரிசாக அவளுக்கு நான் கொடுத்தது அந்த புத்தகம். "அன்புள்ள காதலி கமலத்திற்கு என் காதல் பரிசு" என்ற வார்த்தைகளும் என் கையொப்பமும் அதில் இருந்தது.

விவரிக்க முடியாத வேதனையுணர்ச்சி என் உள்ளத்தில் தோன்றி விட்டது. கமலத்தைப்பற்றிய முழு விபரமும் அறிந்து கொள்ள என்மனம் துடித்தது. அந்த நிலையில் அவள் என்னைப் பார்த்தால் என்ன நினைப்பாளோவென்ற எண்ணம் ஏற்பட்டது. கதவு மெதுவாகத் திறக்கப்படுவது தெரிந்ததும் புத்தகத்தில் கவனம் செலுத்துவது போல் குனிந்து கொண்டேன். எனக்கு இது புதிய அனுபவமும் முதல் தடவையும் தானே!

அந்த அறையில் நுழைந்தவள் சரியாக முகம் தெரியாதபடி முக்காடிட்டிருந்தாள். ஒரு கையில் தட்டும் மறு கையில் ஒரு வெள்ளி டம்ளரில் பாலும் கொண்டு வந்தாள். அவள் மெதுவாக தலை குனிந்தபடியே வந்து மேஜையின்மீது தட்டை வைத்து விட்டு என்னை நிமிர்ந்து பார்த்தாள். பார்த்தது தான் தாமதம், அவள் உடல் நடுக்கமெடுத்துவிட்டது. தட்டுத் தடுமாறிக்கொண்டு டம்ளரை மேஜையின் மேல் வைப்பதற்கு முயற்சிக்கையில் அது தவறி கீழே விழுந்து விட்டது. கீழே விழுந்த பாத்திரத்தை எடுத்து மேஜையின் மீது வைக்க முயற்சிக்காமல் தலை குனிந்தபடியே நின்ற அவளது நிலைமையைக்காண எனக்குப் பரிதாபமாக விருந்தது. ஏதோ தவிர்க்கமுடியாத துர்ப்பாக்கியச் சூழ் நிலையால் அவள் விபசார விடுதியில் சேர்ந்திருப்பவள் என்பதைஅவள் நிலை விளக்கியது. நான் எழுந்து சென்று மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கைத்தூண்டி விட்டேன். விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்க ஆரம்பிக்கவும் அதன் ஒளிக்கதிர்கள் அறை முழுதும் பரவியது. கீழே கிடந்த டம்ளரை யெடுத்து மேஜையின்மீது வைத்து விட்டு அவள் அருகிலேயே நின்றேன். சுடுகாட்டின் அமைதி நிலவிய அந்த நேரத்தில் அவள் உள்ளத்திலிருந்து துக்கம் கலந்த பெருமூச்சு வெளிவந்தது. அப்பொழுது எங்கிருந்தோ வீசிய காற்றினால் அவள் முகத்திலிருந்த முட்டாக்கு விலகியது.

அவளுடைய முகத்தைப் பார்த்தவுடன் பெரும் திகைப்பும், ஆச்சரியமும் உண்டாகியது! "கமலம் நீயா" என்ற இரண்டு வார்த்தைகள் வெடிக்கும் எரிமலையினின்று வெளிவரும் அனல் பிழம்புகள்போல் என் உள்ளத்தினின்றுவெளிவந்தது.

என்னைத் தேடும் முயற்சியில் தோல்வியுற்றபின் பொருந்தாமணத்தில் புகுத்தப்பட்ட அவள் வஞ்சகக் காதலனின் வலை வீச்சில் சிக்குண்டு கட்டிய கணவனை விட்டுப் பிரிந்ததும், ஆறுமாத வாழ்வுக்குப்பின் அப்பாவின் பயமுறுத்தலுக்கு அஞ்சி அவன் அகன்றோடி விடவே,

புதிய ஊரில் புதிய வாழ்வு நடத்திய அவள் மனம் கலங்கி, மீண்டும் ஒரு புதியவனின் தொடர்பில் சில நாள் வாழ்ந்து அவனும் ஓடி விடவே, இந்தத் தாய்க்கிழவியின் 'சாகஸப்பேச்சில் மயங்கி, நேற்று முன்தினமே இவ்வீட்டில் புகுந்ததையும் அவள் கூறக் கேட்ட நான் பெருங் குழப்பத்திற்குள்ளானேன்.

மேற்கொண்டு அவள் எதுவும் பேசவில்லை. தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அவளுடைய பார்வையில் ஏக்கமும், ஏதோ என்னிடம் எதிர்பார்ப்பதும் பிரதிபலித்தது. அவளுக்கு நான் செய்த துரோகத்திற்கு அவளை மீண்டும் என் காதலியாக—வாழ்க்கைத் துணையாக—ஏற்றுக்கொள்வது தான் பரிகாரம் என்கிற முடிவுக்கு வந்த நான் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். அப்போது நான் கண்ட மறுமலர்ச்சியை—மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கண்ட அதே புன்னகையை—எப்படி எடுத்துச் சொல்ல முடியும்?

---

(9ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு, பாடிக் கொண்டே முறையே ஒன்றன்பின் ஒன்றாக எடுக்கிறாள்]

விஞ்ஞானபோதம் அஞ்ஞான வேதம்
இவைகள் இரண்டில் எதுவோ வேணும்

[என்று எதிரில் வந்த சின்னானிடம் காட்டிப் பாடுகிறாள்]

சின்னான்:- எனக்கு எதுவும் வேண்டாம்...அதோ...எசமான்!

விமலா:- [உடனே திரும்பி] அப்பா...!

முதலியார்:- வாம்மா வா! பரிட்சை எல்லாம் என்னாச்சு?

விமலா:- பரிட்சையில் தேறிவிட்டேன் அப்பா! அப்பா! இந்த வருடம் சென்னை மாகாணக் கல்லூரி மாணாக்கர்களிலேயே, பி. ஏ. வகுப்பில் இரண்டாவது பரிசுபெற்றவள் நான்தானப்பா!

முதலியார்:- அப்படியா! மிக்க மகிழ்ச்சி!! ஆனால், முதல் பரிசு யாருக்குக் கிடைத்தது?

விமலா:- என்னுடைய ஆருயிர்த் தோழர் இராஜனுக்கே தானப்பா! அப்பா! உங்களிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும்...?

முதலியார்:- என்ன விஷயம்...?

விமலா:- அப்பா! நான் இரண்டாவது பரிசு பெற்றதற்குக்கூட அந்த இராஜனேதான் காரணம்! அவர் என் பரிட்சைக்குரிய பல முக்கிய 'நோட்ஸ்'கள் கொடுத்து உதவினாரப்பா...!

முதலியார்:- ஓ! அப்படியா! மிகவும் நல்ல பையன் போலிருக்கிறான்! யாரவன்...?

விமலா:- அவரை....இப்போ... இங்கே வரச்சொல்லி இருக்கேன்ப்பா!

முதலியார்:- இங்கே வரச் சொல்லி இருக்கிறாயா! ஏன்?

விமலா:- என்னப்பா! எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்தவரைத் தங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டாமா? மேலும், அவர் மிகவும் எழ்மையான நிலையில் உள்ளவர்; இதற்குமேல் படிக்க முடியாதவர்; ஏதாகிலும் உத்தியோகம் பார்க்கப்போகணும் என்றார்! நான் உங்களிடம் சொல்லி நமது மில்லாபீஸிலேயே ஒரு நல்ல உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறேன்ப்பா!

முதலியார்: ஆகா....! அவ்வளவு நல்ல படிப்பாளியாகவும், உன் கல்வி வளர்ச்சிக்குக் காரணமாகவும் இருந்த ஒருவனுக்கு நம் மில்லாபீஸில் உள்ள 'ஹெட் கிளார்க்' பதவியைக் கொடுப்பதா இருந்தாலும் எனக்கொரு தயக்கமுமில்லை...!

விமலா:- [மிக்க மகிழ்ச்சியோடு] அப்பான்னா, அப்பாதான்!—

இராஜன்:- [வருகிறான்.] அதோ அவரும் வந்து கொண்டிருக்கிறார்! வாருங்கள் வாருங்கள்! இவர்தான் எங்கப்பா!!

இராஜன்:- [முதலியாரை நோக்கி] வணக்கம்!

முதலியார்:- வணக்கம்! உட்காருங்கள். உங்கள் பெயர்தான் இராஜன் என்பதோ...?

இராஜன்:- ஆமாம்!

விமலா:- மிஸ்டர் ராஜ்! உங்களைப் பற்றித்தான் இப்போது அப்பாவிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்பாவும் தங்களுக்கு உத்தியோகம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

இராஜன்:- மிக்க மகிழ்ச்சி! நான் என்றென்றும் தங்கள் நன்றி அறிதலுள்ள உண்மை ஊழியனாக இருந்து என் கடமையைச் செவ்வனே செய்து வருவேன்!

முதலியார்:- அடேய் சின்னான்...!

சின்னான்:- எசமான்...!

முதலியார்:- போயி நம்ம லட்டர் பேடையும், பேனாவையும் எடுத்துக்கிட்டு வாடா.

சின்னான்:- ஆகட்டுங்க எசமான்!

[என்று எடுத்துக்கொண்டு வந்து கொடுக்கிறான்]

முதலியார்:- [விஸ்வனுக்கு ஒரு கடிதம் எழுதி முடித்து இராஜனிடம் கொடுத்து] இதை நம் மில்லாபீஸில் உள்ள மானேஜிங் டைரக்டரிடம் காட்டினால், அவர் உங்களை வேலையில் அமர்த்திக்கொள்வார்.

இராஜன்:- [அதை வாங்கிக் கொண்டு] உங்கள் நன்றிக்கு நான் மிகவும் கடமைப்பட்டவனாகிறேன்! வணக்கம்!

முதலியார் & விமலா :- வணக்கம்!!

பத்மா:- [இராஜன் போன பிறகு, வரும்போதே கிண்டலாக] '...வணக்கம்...!!!' நல்லா இருக்கு! அப்பாவும் மகளும் நடத்துற நாடகம்!! யாரோ ஒரு அன்னிய வாலிபனோடு அவள் தோழமை கொண்டாடுவதும்...நீங்கள் அவள் உத்திரவுப் பிரகாரம் அவனுக்கு உத்தியோகம் கொடுப்பதும்...... எனக்கொன்னுமே பிடிக்கவில்லை.

முதலியார்:- உனக்கு ஒன்னுமே...பிடிக்கலையா...? உம். உனக்குப் பிடிக்கிற காரியம்...விமலாவுக்குப் பிடிக்காது...! விமலாவுக்குப் பிடிக்கிற காரியம்... உனக்குப் பிடிக்காது...!! உங்க ரெண்டு பேருக்கும் மத்தியில் நான்...? கர்மம் கர்மம்...!!

## காட்சி 7.

[வீதி]

உறுப்பினர்:- சின்னான், சின்னாயி.

கதை அமைப்பு:- [சின்னான், சின்னாயி சல்லாபமாய்ச் செல்கின்றனர்]

சின்னான்:- [தன பின்னால் வரும் சின்னாயியோடு பேசிக் கொண்டே வருகிறான்] எங்குட்டி...! ஆமாங்...! நீ எசமான் வீட்டுக்கு வந்து பொடியைக் கொடுத்துட்டு நின்னுக்குனுதானே இருந்தே...! அப்புறம் எப்படித் திடீருனு மாயமா மறைஞ்சு எசமானாகவே மாறீட்டியே...! ஆ...ங்! ஒருவேளை உனக்கு எந்தப் பேய் பிசாசாவது ...வசியமாயிருக்குமோ...?

[என்று பயத்தோடு கூறித் திரும்பிப் பார்க்கிறான்]

சின்னாயி:- [சின்னானை பயங் காட்ட எண்ணி அவனறியாமல் அவனுக்குப் பின்புறமாக வந்து நிற்கிறாள்]

சின்னான்:- அடே! பின்னா

லேயே வந்துக்கிட்டிருந்தவளைக் காணோமே! ஒருவேளை... எங்கேயாவது நின்னுட்டாளோ...? ஏ... குட்டி சின்னாயி! ஏ...குட்டி சின்னாயி...!! ஏ...குட்டி சின்னா...யி...!!!

சின்னாயி:- [பயங்கரமான குரலில்] ஏ...ன்???

சின்னான்:- [திடுக்கிட்டுத் துள்ளித் திரும்புகையில்) அய்யய்யோ...அப்பா...

சின்னாயி:- [சிரிக்கிறாள்]

சின்னான்:- அடச்சி! நீ ஒரு பொம்புளைதானா...? மீசை முளைச்ச ஆம்புளை சிங்கத்தைப் பயங்காட்டி விட்டுச் சிரிக்கவா செய்றே...?

சின்னாயி:- அய்யே...! என் மீசை முளைச்ச ஆம்பளை அசிங்கமே...!! த்தூ! நீயும் ஒரு ஆம்புளையினு வெட்கமில்லாமே வெளியே சொல்றியே...?

சின்னான்:- ஆங்...! என்னா சொன்னே....? நான் ஆம்புளை இல்லையா...?

சின்னாயி:- நீ என்ன சொன்னே...? நான் பொம்புளை இல்லையா...?

சின்னான்:- [அலட்சியமாக.] அடச்சி! நீ ஒரு பொம்புளையே தானே!

சின்னாயி:- [அனாவசியமாக.] சிச்சீ!! நீ ஒரு ஆம்புளையேதானே!

சின்னான்:- அடே...! ஆம்புளையின்னா என்னா? பொம்புளையைக் காட்டிலும் மட்டமுனு நினைச்சுக்கிட்டியா?

சின்னாயி:- ஏன்...உன் பாட்டன் உலகத்திலே பொம்புளையின்னா மட்டமாயிருந்துச்சா...?

சின்னான்:- என் பாட்டன் உலகத்திலே மட்டுந்தானா குட்டி...! பரமேஸ்வரன் உலகத்திலே கூடப் பொம்புளையிலாம் ஆம்புளையைக் காட்டிலும் மட்டந்தானே குட்டி...!! ஆங் ஆங்! சக்தியும், சிவனும் சண்டை போட்டுக்கிட்டாங்களே...! அதிலே யாரு செயிச்சதுன்னு கேக்குறேன்...?

சின்னாயி:- யாருக்குத் தெரியுமுங்குறேன்...?

சின்னான்:- என்ன குட்டி இப்படிச் சொல்றே? நேத்துத்தானே சினிமா படத்திலே கூட்டிக்குனு போயிக் காட்டினேன்...! அதுக்குள்ளேயே மறந்துட்டியா...?

சின்னாயி:- ஆம்மா...! சினிமாப் படத்துலே ... அப்படியுந்தான் காட்டுறாங்க! இப்படியுந்தான் காட்டுறாங்க...!!

சின்னான்:- எப்படியுந்தான் காட்டுறாங்க...?

சின்னாயி:- அதுவா...? மும்மூர்த்தியும் போயி அநசியாதேவிகிட்டே அகப்பட்டுக்கிட்டுச் சின்னப் பாப்பாக்களாகிய அந்தக் காமாந்தகாரக் கடவுளுங்க முழிச்ச முழியைப் பார்க்கும்போது எனக்குக்கூடத்தான் ரொம்பப் பரிதாபமா இருந்துச்சு...!

சின்னான்:- அடடே...! அந்தப் படத்தையும் போயி பாத்துட்டு வந்துட்டியா...? உம், சரி! அப்படின்னா இனிமே ரெண்டு பேரும் சமத்துவமாவே இருந்துக்குவோம்...! வா போகலாம்...

சின்னாயி:- நூ...கூம்...! முடியாது, மூனுஆண் கடவுளே ஒரு பொம்புளைக்குச் சமமா இல்லேனா...! நீ ஒரு சாதாரண ஆம்புளைதானே? பொம்புளைகிட்டே சமத்துவம்பேசி ஏமாத்தவா பாக்குறே...? உம். நானா ஏமாறுவேன்? இந்தா பாரு! இனிமே, நீ எனக்கு அடிமை! நான் சொல்றபடிதான் நீ கேக்கனும்தெரியுமா...?

சின்னான்:- அடி!மடக்கைதே!! மனுசனுங்க பணங்காசுக்குஆசைப் பட்டு, மனம்போன போக்கெல்லாம் புளுகிவைச்ச புராணக்கதைங்களைச் சினிமாப்படம் புடிச்சுக் காட்டினா...! அதைப்போயி நீ மடத்தனமாப் பாத்துட்டுவந்து மீசை முளைச்ச ஆம்புளை சிங்கத்தை அடிமையினு கேக்கப் போச்சா? நாக்கை வெளியே நீட்டுனே நறுக்குப்புடுவேன்...நறுக்கி...!!

சின்னாயி:- ஊம்! உனக்குக்கூட நறுக்கத்தெரியுமா...? சரி...அப்படின்னா ரெண்டு கத்திரிக்கோலுங்களை எடுத்துக்குனுவா...! போகலாம்!!

சின்னான்:- எங்கே...?

சின்னாயி:- இந்தப் புராணப் படங்கள்லாம் புடிச்சு வைச்சிருக்காங்களே! அங்கே!!

சின்னான்:- ஏன்...?

சின்னாயி:- அந்தப் படங்கள்லே எங்கெலாம் ஆம்புளைங்களே மட்டம்னு காட்டுறாங்களோ! அதை எல்லாம் நீ நறுக்கு! எங்கெல்லாம் பொம்புளைங்களே மட்டம்னு காட்டுறாங்களோ அதை எல்லாம் நான் நறுக்குறேன்...!

சின்னான்:- நல்லா இருக்கே உன்ரோசனை! ஆமாங்! நாம ரெண்டுபேருங்கூடிச் சினிமாப் படங்களை இந்தமாதிரி 'ஜிஞ்ஜார்' பண்ண ஆரம்பிச்சுட்டோம்னா...! அப்புறம் அங்கே என்னதான் மிஞ்சும்...?

சின்னாயி:- ரெண்டு கத்திரிக்கோலுங்கதான் மிஞ்சும்!

சின்னான்:- அடிப் படுக்காலிப் பய குட்டி...!

சின்னாயி:- நூக்கும்...! வேறே புராணப் படங்களிலே என்ன தான் இருக்கு மிஞ்சுறதுக்கு...?

[என்று கூறிக்கொண்டே போகிறாள்]

சின்னான்:- ஏ சின்னாயி! இங்கே நீயும் நானுந்தான் இருக்கோமே குட்டி....இதை மறந்துட்டு நடக்கலாமோ எட்டி...?

சின்னாயி:- நேரமாச்சுதே சுட்டி...நடந்துவா ஒட்டி...!

சின்னான்:- ஆகட்டும் என் அழகுப் பெண்டாட்டி...!!

---

# விலகிக் கொண்டேன்!

★

காங்கரஸ் கட்சியின் நீண்ட கால் உறுப்பினனும்உண்மையோடுஉழைத்து வந்தவனுமாகிய நான், இப்போது காங்கரசிலிருந்து விலகிக்கொண்டேன் என்பதாக அறிவிக்கிறார், ஈரோடு நேத்தாஜி வீதித் தோழர் கே. சண்முகம்.

மேலும் அவர், விலகியதற்குக் காரணமாகக் காங்கரசின் இப்போதைய அரசியல் போக்கையும், ஆட்சியாளர்களின் தடுமாற்றமும் பிற்போக்கும் நிறைந்த நடத்தையையும், இன்று சுயநலமிகளும் பதவிவேட்டைக்காரர்களுமே காங்கரசை ஆட்டி வைக்கிறார்கள் என்பதையும் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

★


## புதிய வெளியீடுகள்.

★

1. தீண்டாமை ரூ. 1—8—0
2. இதோ! பெரியாரில் பெரியார் 0—6—0
3. திராவிடக் கழக லட்சியம் 0—4—0
4. மொழி—எழுத்து 0—4—0
5. வாழ்விலோர் திருநாள் 0—4—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:

நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இவனுடைய படைத்தலைவன் ஒருவன் ஒரிஸ்சா, வங்காளம் முதலிய மாகாணங்களின் மேல் படை எடுத்துச் சென்று, பல நாடுகளை வென்று, கங்கை நதியின் தென் கரையிலிருந்த கொடா (Gouda) நகரம் வரையிலும் வெற்றி பெற்றான். மேற்கில் அரபிக்கடல், கிழக்கில் வங்காளக்குடாக்கடல். தெற்கில் இலங்கை வடக்கில் கங்கைநதி இதன் உள்ளிட்ட நாடே இவனது ஆட்சியில் அடங்கியிருந்தது. இத்துடன் நிற்கவில்லை; கடல் கடந்து சென்றும் பல நாடுகளை வெற்றிபெற்றான். ஆங்கிலேயே ஆட்சிகாலம்வரை, இந்தியாவில் ஆண்ட எந்த அரசனும் இவ்வளவு பெரிய நாட்டை ஆளவில்லை. இந்தியாவோடுமட்டும், அதுவும் நர்மதை, வடபெண்ணை நதிகளோடேயே நின்றார்களேயன்றி கடல் கடந்த நாடுகளில் கால் வைக்கவேயில்லை. அசோகன், அக்பர், ஔரங்கசீப் போன்றவர்கள்கூட பர்மா, மலேயா நாடுகளை வெல்லவில்லை. பர்மா, மலேயா, இலங்கை, சுமத்திரா, போர்னியோ, ஜாவா போன்ற நாடுகளை வெற்றி பெற்றது திராவிட அரசர்களேயன்றி, வேறு எந்த இந்திய அரசனும் வெற்றி பெறவில்லை.

கெடா (Kedah) அரசர்கள் மீண்டும் பலம் பெற்று பெரியபடையோடு விளங்கினார்கள். இதையறிந்த ராஜேந்திரன் படை எடுத்துச் சென்று அதன் அரசனான சங்கராம விஜயோத்துங்கவர்மன் என்பவனைத் தோற்கடித்தான். இவன், ஜாவாவில் ஆண்ட அரசன் சைலேந்திர (Sailendra) வம்சத்தைச் சார்ந்தவன். முதலாவது ராஜராஜன் காலத்திலிருந்த சூடாமணிவர்மனின் பரம்பரை.

சோழ அரசர்கள் கடல் கடந்து சென்று வெற்றிபெற்ற நாடுகளின் பெயர்களைத் திட்டமாகச் சொல்லமுடியவில்லை. ஏனென்றால் அவைகளின் பெயரெல்லாம் தற்பொழுது மாறி விட்டதால், ராஜராஜேஸ்வரர் கோவில் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளவைகளிலிருந்து, அந்தந்த நாடுகள் எங்கேயுள்ளவை என்பது சரியாகவிளங்கவில்லை. உதாரணமாக பரிவிஜயா என்பது சுமத்திரா நாட்டையும், பாப்பளம் அல்லது பப்பாப்பளம் என்பது பர்மாவையும், கடாரம் என்பதும் நாக்கவாம் என்பதும் நிக்கோபர் தீவுகளையும் குறிப்பது. இதுபோன்று சில கண்டுபிடிக்கப்படுகின்றன. லங்காசோகா (Lankasoka) மையிருடிங்கன் (Mayirudingan) முதலியவைகள் கடல்கடந்த நாடுகளாகத்தான் தெரிகின்றன. ஆனால் இவைகள் தற்பொழுது எத்தீவுகளைக் குறிக்கின்றன என்பது தெரியவில்லை. அந்த சுவர் வெட்டுகளில் இவைகளை அறிவதற்கும் தக்க சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ராஜேந்திர சோழன் கி. பி. 1042ல் இறந்ததும் அவனுடைய மகன் ராஜாதிராஜன் பட்டத்திற்கு வந்தான்.

ராஜாதி ராஜன் பட்டத்திற்கு வந்ததும் மிகப்பெரிய ஆபத்தை எதிர்பார்க்கவேண்டி வந்தது. தெற்கிலிருந்த, மாணாபரனான், வீரகேரளன், சுந்தரபாண்டியன் மூவரும், சிலோனை ஆண்டுவந்த விக்கிரம பாகுவும், விக்கிரம பாண்டியன், வீரசெலமுகன், சிவல்லப மதன ராஜா ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்து கொண்டு சோழ சாம்ராஜ்ஜியத்தைக்குலைக்க ஆரம்பித்தனர். ராஜாதி ராஜன் பட்டத்திற்கு வந்த நான்கு ஆண்டுகளுக்குள்ளேயே, இந்த ஏழு நாட்டரசர்களும் ஒன்று சேர்ந்து சோழ நாட்டோடு கொண்டிருந்த ஒப்பந்தத்தை உடைத்துக் கொண்டனர். இதையறிந்த ராஜாதிராஜன் ஒரு பெரிய படை திரட்டினான். விக்கிரம பாண்டியன், வீரகேரளன் இவர்களை வென்று, அவர்களின் தலையை வெட்டி வீழ்த்தினான். வடக்கே, மேலச் சாளுக்கிய அரசன் முதலாம் சோமேஸ்வரனைக்கோப்பம் என்ற இடத்தில் தோற்கடித்தான். இந்த வெற்றியின் ஞாபகச் சின்னமாக, இவனுடைய இளைய சகோதரன் கோலபுரத்துக்கருகில் ஒரு பெரிய கற்றூணை நிறுத்தி அதில் சோழர்களின் வீரங்களைச் செதுக்கி வைத்தான். கிழச்சாளுக்கிய அரசன், வாகினியில் ஆண்ட விஜயதத்தனையும், வேறொரு அரசன் கணபதி என்பவனையும் தோற்கடித்தான். இந்த வெற்றிகளினால் சோழ நாட்டைச் சீர்குலைக்க அந்த ஏழு அரசர்களும் இட்ட திட்டம் வெற்றி பெறவில்லை. இலங்கையைப் பார்த்துக்கொள்ள ராஜாதிராஜனின் இளைய சகோதரன் ராஜேந்திர தேவன் நிறுத்தப்பட்டான். இவன் சிலோன் அரசன் வீரசெலமுகனின் தலையைச் சீவிவிட்டு, மாணாபரணின் இரண்டு குமாரர்களையும் சிறை பிடித்து வந்தான். ராஜாதி ராஜன், ராஜேந்திரனென்னும் தன் சகோதரனால் கி. பி. 1052ல் சிறை பிடிக்கப்பட்டான்.

ராஜேந்திர தேவன், தன் காலத்தின் பெரும்பகுதியை, தன்னுடைய சகோதரன் கூடச் சேர்ந்து கொண்டு வேற்று அரசர்களை முறியடிப்பதிலேயே கழித்தான். சிலோன் நாட்டோடும், சாளுக்கிய நாட்டோடும், இவன் செய்த பெரும் போர்கள், இவனுடைய போர்த் திறமையைக்காட்டுகின்றன. இவன், தன்னுடைய மகள் மதுராந்தகி என்பவளைக் கீழசாளுக்கிய அரசன் மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். இவன் சோழநாட்டைப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆண்ட பிறகு, இவனுடைய சகோதரன் வீரராஜேந்திர ராஜகேசரிவர்மன் கி. பி. 1063ல் சிம்மாசன மேறினான்.

வீரராஜேந்திர ராஜகேசரிவர்மன் அரசனானதும் மேல சாளுக்கிய வம்சம் பலம் பெற்று ஆறாம் விக்கிரமாதித்தன் அரசனானான். விக்கிரமாதித்தன் வாகினியின் கீழ சாளுக்கிய ராஜ்ஜியத்தில் தலையிடமுற்பட்டான். அதனால் ராஜராஜன் இறந்த பிறகு, இந்த ராஜ்ஜியம் ராஜராஜனின் மகன் இரண்டாவது ராஜேந்திர சோழனுக்குக் கொடுக்கப்படாமல் 7வது விஜயாதித்தனுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த 7வது விஜயாதித்தன் என்பவன் முதலாவது ராஜேந்திர சோழனின் பெண் வீட்டுப் பேரன்.

கடைசியாக வீரராஜேந்திரன், ஆறாவது விக்கிரமாதித்தனையும் அவனுடைய சகோதரன் மூன்றாவது ஜெயசிம்மனையும் கிருஷ்ணா, துங்கபத்திரா நதிகளுக்கிடையில் நடந்த கூடல் சங்கமம் என்னும் பெரிய போரில் தோற்கடித்தான். மற்றொரு முறை காம்பிலி நகரத்தில் நடந்த சண்டையில் இரண்டாவது சோமேஸ்வரனை வென்றான். கடைசியாக இவன் கன்னட தேசத்தையும் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான். நாலாவது விக்கிரமாதித்தன் உதவியைக் கொண்டு இரண்டாவது சோமேஸ்வரனைப் பட்டத்திலிருந்து நீக்கி விட்டு, சாளுக்கிய நாட்டையும் தன்னாட்டோடு சேர்த்துக் கொண்டான். வீரராஜேந்திரன் வடக்கே சக்ர

கோட்டை வரையில் சென்று தேவானந்தா என்னும் அரசனை வென்றான். இவன் கடல்கடந்து சென்று வெளிநாடுகளையும் வெற்றிகொண்டான். மலேயா நாகப்பத்திலுள்ள கடாரத்தை வென்றான். இவ்வளவையும் இவன் ஏழு ஆண்டுகளே ஆண்டான். பிறகு ஆதி ராஜேந்திரன் என்னும் இவனுடைய மகன் பட்டத்திற்கு வந்தான்.

மேல சாளுக்கியர்களின் கல்வெட்டுப்படி வீர ராஜேந்திரனின் மகன் ஆதி ராஜேந்திரன் நான்காம் விக்கிரமாதித்தன் என்பவனால் அரசனாக்கப்பட்டான் என்று சொல்லப்படுகிறது. ஆதிராஜேந்திரன் இறந்த பிறகு இரண்டாம் ராஜேந்திர சோழன் சோழநாட்டின் அரசனானான். இவன் முதலாம் குலோத்துங்கன் என்னும் பட்டத்தை வைத்துக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். நான்காவது விக்கிரமாதித்தன் சோழ அரசுக்குப் பாத்தியம் கொண்டாடினான். ஆனால் வெற்றி பெறவில்லை. குலோத்துங்கன் அரசனான சில நாட்களுக்குள் மாளவத்தின் மேல் படை எடுத்துச் சென்று, அதன் அரசனான உதயாதித்தனை சக்ரகோட்டையில் வென்றான். சேர, பாண்டிய நாடுகளையும் வென்று தன்னாட்சியில் கொண்டு வந்தான். பராந்தகன் பிடித்த நாடுகளையெல்லாம் சோழ அரசர்கள் பரம்பரையாகத் தங்கள் ஆட்சியில் கூடுமான வரையில் வைத்திருந்தார்களென்றாலும் சில நாடுகள் விலகியே இருந்து வந்தன. அவைகளையெல்லாம் குலோத்துங்கன் திரும்பவும் சோழ நாட்டோடு சேர்த்தான். இவன் பட்டத்திற்கு வந்த பன்னிரண்டாம் ஆண்டில் (கி. பி. 1095-6) கலிங்கத்தின் மேல் படை எடுத்துச் சென்று வெற்றி பெற்றான். இவன் 49 ஆண்டுகள் சோழநாட்டை மிகத் திறமையாக ஆண்டுவிட்டு கி. பி. 1118ல் இறந்து விட்டான். குலோத்துங்கனுக்குப்பின், இவனுடைய மகன், விக்கிரம சோழன் என்பவன் சோழ நாட்டின் அரசனானான். இவனுக்குப்பின் சோழ நாடு அவ்வளவு கீர்த்தியோடு விளங்கவில்லை.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE.

## இதென்ன! காலிகள் ராஜ்ஜியமா?

சேலம் மாவட்டம் நத்த மேடுக்கிராமத்தில், திராவிடக் கழக உறுப்பினர் சிலர் கூடி, கழகக் கொடியேற்றுவிழா செய்தனர். கொடியேற்றப்பட்டு ஏழு மணி நேரம் ஆனபின், கழகத் தோழர்கள் அந்நேரத்தில் அப்போது இல்லை என்கிற தைரியத்தோடு, அன்றுமாலையில் சில காலிகள் கும்பலாக வந்து அக்கொடியை இறக்கிக் கிழித்துத் தீ வைத்தார்களாம்.

முரடர்களின் முட்டாள்தனமான இச்செயலைக் கேட்டு, "நீங்கள் என் கருப்புக்கொடி கட்டவேண்டும்? ஊர் முழுவதும் எதை ஆமோதிக்கிறதோ, அந்தக்கட்சியில் தானே எல்லோரும் சேர்ந்து உழைக்கவேண்டும்! அதுதானே முறை!" என்றாராம் அப்பகுதியின் மா. கா. க. மெம்பர்.

காலித்தனத்திற்கு ஆக்கமளித்து, அதைத் தூண்டி வளர்த்துவரும் தோரணையில் கமிட்டி மெம்பர்களும் ஆதரிப்பார்களானால், அந்தக் கமிட்டி மெம்பர்களுக்கு அப்படி நடத்திக் காட்ட வேண்டுமென ஏதாவது உத்திரவு வந்திருக்கிறதா? அப்படியானால் நடப்பதென்ன காலிகள் ராஜ்ஜியமா? இந்தக் காட்டுமிராண்டித்தனத்திற்கு எப்போது முற்றுப்புள்ளி என்று கேட்கிறார் ஒரு நத்தமேட்டுத் தோழர்.

### இனமணி.

சிங்கப்பூர் துல்பிலாங்காரோட் தோழர் வே. கோவிந்தசாமியின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் இலட்சுமியம்மாள் 17—10—48ம் நாள் ஈன்ற ஆண்மகவுக்கு 31—10—48ம் நாள் இனமணி எனப் பெயர் சூட்டியதின் நினைவாக நமக்கனுப்பிய நன்கொடை ரூ 2ம் வரப்பெற்றோம்.

## புதிய பதிப்பு

விற்பனைக்குத் தயார்!

1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0
5. திராவிடர்-ஆரியர் உண்மை 0—2—0
6. கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? 0—5—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்
நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

## நகர திராவிடர் கழகம் உதகமண்டலம்.

21—11—48 ஞாயிற்றுகிழமை மதியம் $1\frac{1}{2}$ மணிக்கு பாறை முனீஸ்வரன் கோவில் முன்னிலையில் திராவிடர் சதுக்கத்தில் கிருட்டினசாமி பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்களான ஈரோடு எஸ். அப்பாவு, திருச்சி சஞ்சீவிராசு, ஆகியவர்கள் திராவிடர் கழகத்தின் கொள்கைகளையும், திட்டங்களையும் மிக விளக்கமாகப்பேசினார்கள். முடிவில் தலைவர் ஆறுமுகம் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.


## படித்துவிட்டீர்களா?

(●)

இந்தி எதிர்ப்புக் கவிதைகள்!
"சிரிக்கும் வையம்" விலை அணா 0—4—0

உணர்ச்சியூட்டும் இயக்கப் பாடல்கள்!
"திராவிடநாட்டுப் பிரிவினைப் பாடல்கள்" 0—6—0

பெரியாரின் சங்கநாதம்!
"தில்லையில் பெரியார்" விலை அணா 0—8—0

அறிவுக்கு விருந்தான ஆராய்ச்சி நூல்!
"நரகாசுரப் படுகொலை" விலை அணா 0—12—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:—
நாதன் கம்பெனி, கச்சேரி வீதி, ஈரோடு.